உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்


e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-187

மார்ச் 1-16 2025




## பொறாமை, வயிற்றெறிச்சல், கண்திருஷ்டிகளைப் போக்கும்

# வில்வ இலை

# சிவராத்திரி விரதம் இருக்கும் பாண்டுரங்கன்



- சிவபெருமான் லிங்கமாக உருவெடுத்த தினமே சிவராத்திரி என்று ஒரு கருத்து உண்டு.
- சிவராத்திரி தினத்தன்று, தியாகராஜர் என்ற பெயரில் ஈசன் வீற்றிருக்கும தலங்களில் தரிசனம் செய்தால் பாவங்களில் இருந்து விடுபடலாம்.
- கஞ்சனூரில் ஒரே பிரகாரத்தில் அடுத்தடுத்து 2 தெட்சிணாமூர்த்திகள் உள்ளனர். சிவராத்திரி யன்று இவர்களை வழிபட்டால், சிவஞானம் எளிதில் கிடைக்கும் என்பது நம்பிக்கை.
- பண்டரிபுரத்தில் உள்ள பாண்டு ரங்கன் ‘‘சங்கர மற்றும் நாரா யண’’ வடிவம் என்பார்கள். பாண்டுரங்கன் தலையில் கிரீடத்துக்கு பதில் ‘‘பாண லிங்கம்‘‘ இடம் பெற்றுள்ளது. சிவராத்திரி தினத் தன்று பாண்டுரங்கனுக்கு நிவேதனம் செய்வதில்லை. அவரும் அன்று சிவ ராத்திரி விரதம் இருப்பதாக சொல்கிறார்கள்.



- சிவராத்திரி தினத்தன்று சிவபுரா ணம், தேவாரம் மற்றும்திரு முறைகள் படிப்பது மிகவும் நல்லது.
- திருவைகாவூர் ஈசனை சிவராத் திரி தினத்தன்று வழிபட்டால், மரண பயம் நீங்கும்.

## அர்ச்சனைக்கு வாழைப்பழம், தேங்காய் படைப்பது ஏன்?

எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டை யை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால் தேங்காயை உடைத்து சாப்பிட்டு விட்டு ஓட்டைப் போட் டால் அது முளைக்காது. வாழைப்பழத்தை உறித்தோ அல்லது முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியை காட்டுகிறது. இதுபோல மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என இறைவனிடம் வேண்டவே நாம் கடவுளுக்கு தேங்காய், வாழைப்பழம் படைக்கிறோம்.



அதுமட்டுமல்ல, தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயில் இருந்து தான் தென்னை மரம் முளைக்கும். அது போல, வாழை மரத்திலிருந்து தான் வாழைக்கன்று வரும். கொட்டையில் இருந்து வருவதில்லை. அப்படி நமது எச்சில் படாத இவற்றை போட்டாலும் அது முளைக் காது. உகந்ததா படைக் கும் மரபினை நமது முன்னோர்கள் உருவாக்கி னார்கள்.

ஆன்மிகமலர்

e-magazine
aanmeegamalar.com

# நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சிவலிங்கங்கள்!!!

e-magazine
aanmeegamalar.com



மதங்கேஸ்வர் சிவலிங்கம், கஜூராஹோ, மத்தியபிரதேஷ்.

விஞ்ஞானம் பேசி இறை கொள்கையை மறுத்த பலர் விஞ்ஞானத்தின் எல்லையையும் சக்தியையும் புரியாமல் விழிக்கும்போது இறை என்ற ஏதோ ஒரு சக்தி இருப்பதை உணர் கின்றனர்.

அந்தவகையில் உலக அளவில்இறைசக்தி யை உணரும் பலரும் பல்வேறு கடவுள்களை ஏற்று அதில் சரியான பாதை இல்லை என்பதை உணர்ந்து கடைசியில் வந்து சேருகின்ற இடம் சிவபூஜையும், சிவ ஆராதனையும் தான்.

அந்த வகையில் உலக அளவில் சிவ வழி பாடு என்பது அபரிமிதமாக பெருக் கெடுத்து காணப்படுகிறது.

அந்த சிவ வழிபாட்டை மேற்கொள்வதிலும், பல்வேறு ஆச்சரியங்களும், அதிசயங்களையும் பல்வேறு வகையில் கண்கூடாக பார்த்து வருகிறோம்.

அந்த வகையில், கல்லால் உருவான சிவலிங்கங்கள் வளர்ந்து வருவதை ஆச்சரிய மான விஷயமாகவே அறியத் தோன்றுகிறது. அந்த வகையில் வளரும் ஒருசில சிவ லிங்கங் களைப் பற்றி பார்ப்போம்.

**மதங்கேஸ்வர் சிவலிங்கம், கஜூராஹோ, மத்தியபிரதேஷ்.**

மத்திய பிரதேஷ், கஜூராஹோவில் உள்ள மதங்கேஸ்வர் திருக்கோயிலில் உள்ள ‘மதங்

கேஸ்வர்' ஆண்டுதோறும் வளர்ந்து வரும் சிவலிங்கமாகும். எட்டடி நான்கங்குலம் உயரமும் மூன்றடி எட்டங்குலம் விட்டமும் உடைய சிவலிங்கம் இது. அயோத்தி இராமன் இங்குவந்து மதங்கேஸ்வரரை வணங்கியதாக புராணங்கள் கூறுகின்றன. இச்சிவலிங்கம் மிருத்துஞ்சய மஹாதேவ் என்றும் அழைக்கப் படுகிறது.

கஜுராஹோவில்உள்ள மிகமுக்கியமான சிவாலயம் இது. உள்ளூர் மக்கள், ஒவ்வொரு ஆண்டும் எள் அளவு இச்சிவலிங்கம் வளர்ந்து வருவதாகக் கூறுகிறார்கள்.


பூதேஸ்வர்மஹாதேவ் சிவலிங்கம், சத்தீஸ்கர்.

### பூதேஸ்வர்மஹாதேவ் சிவலிங்கம், சத்தீஸ்கர்

சத்தீஸ்கர் மாநில தலைநகரான ராய்ப்பூரி லிருந்து சுமார் 90 கி.மீ. தூரத்தில் காரியா பந்த் என்ற மாவட்டம் உள்ளது. அங்குள்ள மரோடா என்ற கிராம பகுதியில் உள்ள காட்டில் பூதேஸ்வர் மகாதேவ் என்னும் சிவ லிங்கம் அமைந்துள்ளது. உலக அளவில் பெரிய அளவுள்ள சுயம்பு சிவலிங்கமாக இது சொல்லப்படுகிறது.

உலக அளவில் பிரபலமாகியுள்ள இந்த சிவலிங்கம் அதன் வளரும் சக்திக் காக அனைவராலும் பயபக்தியுடன் வணங்கப் படுகிறது. சுற்றுப்புற மக்களிடையே இந்த சிவலிங்கம் 'பாகுரா மகாதேவ்' என்றும் குறிப் பிடப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் இந்த சிவலிங்கம் குறிப்பிட்ட அளவுக்கு வளர்ச்சி அடைகிறது என்பது ஒரு அதிசய நிகழ்வாக பார்க்கப் படுகிறது. அதாவது, உயரம் மற்றும் அகலம் ஆகிய இரண்டு பரிமாணங்களில் அதன் வளர்ச்சி அதிகமாகிக்கொண்டு உள்ளது.

இந்த சிவலிங்கத்தின் அளவானது ஒவ்வொரு வருடமும் வரக்கூடிய மகாசிவராத் திரி அன்று வருவாய்த் துறை அதிகாரிகளால் அளவீடு செய்யப்படுவதாக கோவிலில் பூஜை செய்பவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.


மருதேஸ்வர் மஹாதேவ், சாஹிரா, பஞ்சமஹால், குஜராத்.

### மருதேஸ்வர் மஹாதேவ், சாஹிரா, பஞ்சமஹால், குஜராத்.

குஜராத், பஞ்சமஹால் மாவட்டம், கோத்ரா சாஹிராவில் அமைந்துள்ளது மருதேஸ்வர் மஹாதேவ் திருக்கோயில்.சத்யயுகம் என் னும் கிரேதா யுகத்தில் தோன்றிய இந்த சுயம்பு இலிங்கம், வளர்ந்து விதானத்தைத் தொடும்போது மகாபிரளயம் வந்து அனைத்தும் அழியும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

ஆண்டுக்கு அரிசியளவு வளர்கிறதாம்! சிவலிங்கத்தின் தோற்றம் அதன் பழமையை உணர்த்துகிறது.

அதுமட்டுமன்று; கங்கை சிவலிங்கத்தின் உச்சியிலிருந்து பிரவாகம் செய்வதாகவும் நம்புகிறார்கள்; அதற்குச் சான்றாக, சிவலிங் கத்தின் உச்சியிலிருந்து நீரானது சதா ஊறிக்கொண்டிருக்கிறது.



e-magazine aanmeegamalar.com



**திலபந்தேஸ்வர் மஹாதேவ் மந்திர், வாரணாசி, உத்தரப்பிரதேஷ்.**

காசிமாநகரம், பாரத மணித்திருநாட்டின் புண்ணிய இடங்களிலே தலைமைப் பீடம். விஸ்வநாதர் திருக்கோயில் மட்டுமன்று எண் ணற்ற சிவாலயங்களைக் கொண்டுள்ள புனித இடம். காசியில் பாண்டே ஹவேலி என்னும் இடத்தில் அமைந்துள்ள பாபா தில்பந்தேஸ்வரர் திருக்கோயில் சிவலிங்கம் சுயம்பு இலிங்கமாகும். சத்யயுகம் என்னும் கிரேதா யுகத்தில் தோன்றிய இந்த சுயம்பு இலிங்கம், நாளுக்கு நாள் எள் அளவு வளர்ந்துகொண்டே வருகிறது. ஆண்டுதோறும் மகரசங்கராந்தியன்று இதனைக் கண்கூடாகக் காணலாம் என்கிறார்கள்.


**பௌரிவாலா ஷிவ் மந்திர், நாகன், ஹிமாச்சல் பிரதேஷ்.**

பௌரிவாலா ஷிவ் மந்திர், இராவணனின் வரலாற்றோடு சம்பந்தப்பட்டுள்ளது.இராவ ணன் சிவப்பரம்பொருளிடம் என்றும் இறவா சிரஞ்சீவி பதவியைக் கேட்டானாம். சிவப்பரம்பொருள், ஒரு நாளுக்குள் ஐந்து படித்துறைகளை அமைக்க வேண்டும் அப்படி அமைத்தால் சிரஞ்சீவிப் பதவி கிடைக்கும் என்று கூற, இராவணன் முதலில் அமைத்தது ஹரித்துவாரில் உள்ள ஹர் கி பௌரி. சிவ பெருமானின் பாதங்கள். இரண்டாவதாக இந்த தலத்து பௌரிவாலா; மூன்றாவதாக சித்தேஸ்வர் மஹாதேவ்; நான்காவதாக கின்னர் கைலாஷ்; அதன்பிறகு உறங்கிவிட்டா னாம். விழித்தெழுந்து பார்த்தபொழுது விடிந்துவிட்டதாம். சிவப்பரம்பொருள் முன்பு நாணி நின்றானாம். இராவணன் வணங்கிய இந்த சுயம்பு இலிங்கம் இன்று நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாகக் கூறுகிறார்கள்; ஆண்டுக்கு பார்லி அரிசி அளவு வளர்கிறதாம்!



e-magazine
aanmeegamalar.com

# சிவனை அறிய உதவும் குறிப்புகள்




- சிவசின்னங்களாக போற்றப்படுபவை திருநீறு, ருத்ராட்சம், நமசிவாய மந்திரம்
- சிவனுக்கு அன்னாபிஷேகம் நடக்கும் காலம் ஐப்பசி பவுர்ணமி
- சிவன் யோகியாக இருந்து ஞானத்தை அருளும் கோலம் தட்சிணாமூர்த்தி
- ஆன்மாவைக் குறிக்கும் சிவன் எங்கிருக்கிறார்? திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்)
- காலனை உதைத்த காலசம்ஹார மூர்த்தியாக ஈசன் அருளும் தலம் திருக்கடையூர்
- ஞானசம்பந்தரைக் காண சிவன் நந்தியை விலகச் சொன்ன தலம் பட்டீஸ்வரம்
- ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் சிவன் மீது பாடியவர் திருமூலர்
- முக்திவாசல் என்று போற்றப்படும் திருத்தலம் திருவெண்காடு (நவக்கிரக புதன் ஸ்தலம், நாகப்பட்டினம் மாவட்டம்)
- ஐப்பசியில் காவிரியில் சிவபார்வதி நீராடுவது துலாஸ்நானம்
- ஐப்பசி கடைசியன்று மயிலாடுதுறையில் நீராடுவது கடைமுகஸ்நானம்
- சிவனுக்கு மாடக்கோயில் கட்டிய மன்னன் கோச்செங்கட்சோழன்.
- கூத்தப்பன் என்று போற்றப்படும் இறைவன் நடராஜர் (கூத்து என்றால் நடனம்)
- தரிசிக்க முக்தி என்ற சிறப்பைப் பெற்ற தலம் சிதம்பரம்
- வாழ்வில் ஒருமுறையேனும் செல்ல வேண்டிய தலம் காசி
- சிவன் நெருப்பாக வளர்ந்து நின்ற தலம் திருவண்ணாமலை
- அம்பிகை மயில் வடிவில் சிவனை பூஜித்த தலம் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில்
- மாதம் தோறும் வரும் விழாக்களைப் பட்டியலிடும் தேவாரம் மயிலாப்பூர் தேவாரம் (சம்பந்தர் பாடியது)
- தட்சிணாமூர்த்தி கைவிரல்களை மடக்கிக் காட்டும் முத்திரையின் பெயர். சின் முத்திரை
- கயிலாயத்தில் தேவலோகப் பெண்களுடன் காதல் கொண்டதால், பூலோகத்தில் பிறவி எடுத்தவர். சுந்தரர்
- வேடுவச்சியாக இருந்த பார்வதியை

ஆன்மிகமலர்.காம்



வேடனாய் வந்து ஈசன் மணந்த தலம் ஸ்ரீசைலம் (ஆந்திரா)

- சக்தி பீடங்களில் பைரவி பீடமாகத் திகழும் தலம் ஒரிசாமாநிலம் பூரி ஜெகந்நாதர் கோயில்
- இறைவன் இறைவிக்கு இடபாகம் அளித்த தலம் திருவண்ணாமலை
- கார்த்திகை தீபத்திருளில் அவதரித்த ஆழ்வார் திருமங்கையாழ்வார்
- திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருநாளன்று காலையில் ஏற்றும் தீபம் பரணிதீபம் (அணையா தீபம்)
- அருணாசலம் என்பதன் பொருள் அருணம்+ அசலம் சிவந்த மலை
- ஆறாதாரங்களில் திருவண்ணாமலை ஆதாரமாகத் திகழ்கிறது மணிபூரகத் தலம்
- திருவண்ணாமலையில் பவனிவரும் சோமஸ்கந்தரின் பெயர். பக்தானுக்ரக சோமாஸ்கந்தர்
- ‘கார்த்திகை அகல்தீபம்’ என்னும் அஞ்சல் முத்திரை வெளியான ஆண்டு. 1997, டிசம்பர் 12
- அருணகிரிநாதர் கிளிவடிவில் முக்தி பெற்ற இடம். திருவண்ணாமலை (கிளி கோபுரம்)
- கார்த்திகை நட்சத்திரம் சிவபெருமான், முருகப் பெருமான், சூரியன் ஆகிய தெய்வங்களுக்கு உரியது
- குறைந்தபட்சம் விளக்கு ஏற்ற வேண்டிய காலம் 24 நிமிடங்கள் (ஒரு நாழிகை)
- சிவாம்சமாகப் போற்றப்படும் ராமபக்தர் அனுமன்
- நமசிவாய’ என்று தொடங்கும் சிவபுராணம் எதில் இடம்பெற்றுள்ளது? திருவாசகம்
- தர்மதேவதை நந்தி என்னும் பெயர் தாங்கி ஈசனைத் தாங்கி வருவதை எப்படி குறிப்பிடுவர்? அறவிடை(அறம் தர்மம், விடைகாளை வாகனம்)
- மனிதப்பிறவியில் அடைய வேண்டிய நான்கு உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு(மோட்சம்)
- சிவபெருமான் ஆடிய நாட்டியங்கள் எத்தனை? 108
- சிவபெருமானின் நடனத்தை காணும் பேறு பெற்ற பெண் அடியவர் காரைக்காலம்மையார்
- ‘மனித்தப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே’ என்று நடராஜரிடம் வேண்டியவர் அப்பர் (திருநாவுக்கரசர்)



aanmeegama

## பொறாமை, கண்திருஷ்டி, வயிற்றெறிச்சலை போக்கும்

# வில்வ இலை

அடுத்தவர்களின் கண்திருஷ்டி உங்கள் மேல் விழாமல் இருக்க, இப்படி நீங்கள் குடும்பத்தோடு செல்லும் போது, உங்களுடைய கைகளில் ஒரு வில்வ இலையை எடுத்துச் செல்ல வேண்டும்.

எப்படிப்பட்ட அதிர்ஷ்டசாலிகளாக இருந்தாலும், எவ்வளவு பொருட்களை வாங்கிக் குவிக்கும் யோகம் உள்ளவர்களாக இருந்தாலும், அஷ்டலட்சுமி உங்கள் வீட்டில் தான் குடி இருக்கின்றாள் என்றாலும், கஷ்டத்தைக் கண்டு நீங்கள் பயப்படாதவர்களாக இருந்தாலும், அடுத்தவர்களின் கண் பார்வைக்கும், வயிற்றெரிச்சலுக்கும், கண் திருஷ்டிக்கும் கண்டிப்பாகப் பயந்துதான் ஆக வேண்டும்.


அடுத்தவர்களின் கண்திருஷ்டி உங்கள் மேல் விழாமல் இருக்க, இப்படி நீங்கள் குடும்பத்தோடு செல்லும் போது, உங்களுடைய கைகளில் ஒரு வில்வ இலையை எடுத்துச் செல்ல வேண்டும். வெளியில் சென்று விசேஷங்களில் கலந்து கொண்டு, வீடு திரும்பும்போது வீட்டு வாசலில் நின்று உங்கள் வீட்டு உறுப்பினர் அனைவரையும் வாசலிலேயே நிறுத்தி, உங்கள் கைகளில் இருக்கும் வில்வ இலையை எடுத்து திருஷ்டி சுற்றுவது போல் எல்லோரையும் சுற்றி வீட்டு, வாசலிலேயே அந்த இலையை இரண்டாகக் கிழித்துப் போட்டு விட வேண்டும்.

இப்படிச் செய்யும்பட்சத்தில் அடுத்தவர்களின் கண் திருஷ்டியும், வயிற்றெரிச்சலும் கட்டாயமாக உங்களைத் தாக்காது. நீங்கள் வாங்கிய பொருட்களும் எந்தவித சேதாரமும் இல்லாமல் இருக்கும்.

தினம்தோறும் சோம்பேறித்தனம் பார்க்காமல் வேலைக்குச் சென்று வருபவர்களுக்கும் இப்படி ஒரு கண்திருஷ்டி ஏற்படும். அவர்கள் கூட தங்கள் கைகளில் ஒரு வில்வ இலையை வைத்துக்கொள்ளலாம். தினம்தோறும் வேலைக்குச் சென்று வந்த பிறகு, வீட்டு வாசலில் தங்களுடைய தலையை மூன்று முறை சுற்றி, இந்த இலையைக் கிழித்து வாசலில் போட்டு விடுவதும் நல்ல பலனைத் தரும். கண் திருஷ்டியால் உங்களுடைய வேலைக்கும் எந்தவித பிரச்சினையும் வராது.



e-magazine
aanmeegamalar.com



# கர்மவினை முற்றிலும் நீக்கும் குடிமல்லம் பரசுராமேஸ்வர கோயில்

எத்தனையோ முறை திருப்பதி சென்றுள்ளோம். இந்த முறை சென்றால் இக்கோவில் தரிசனத்தை மட்டும் தவறவிடாதீர்கள் உலகப் பழம்பெறும் சிவலிங்கத்தை தரிசனம் செய்த புண்ணியம் உங்களுக்கு கிடைக்கும்.

உங்கள் கர்மவினை முற்றிலும் நீங்கக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும். இதை தரிசனம் செய்த பல மனிதர்கள் வாழ்க்கையில் அத்தனை ஆனந்த திருப்பங்களும் வாழ்வில் பிறந்த பயனையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரேணிகுன்டாவில் இருந்து 12 கிமீ தொலைவில் உள்ள “குடிமல்லம்“ எனும் கிராமத்தில் உள்ள “பரசு ராமேஸ்வர” ஆலயத்தில் கிமு மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த லிங்க வடிவம் காணப்படுகிறது. இக்கோயிலில் உள்ள செங்கல் கிபி ஒன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறியப்பட்டுள்ளது. பல்லவர், பாணர், சோழர் கால கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் பழமையானது நந்திவர்மன் காலத்து கல்வெட்டு.

லிங்கம் 5 அடி உயரம். தடிமன் 1 அடி. லிங்கத்தின் தண்டு பகுதி 4 அடி. நுனியில் உள்ள மொட்டு 1 அடி. தண்டுப் பகுதியில் ஓர் வேடன் உருவம் வலது கையில் ஆட்டை தொங்கவிட்டும், மறு கையில் சிறு பாத்திரமும், தோளில் வேட்டை கோடரி (பரசு) யும் வைத்துள்ளவாறு செதுக்கப் பட்டுள்ளது. மார்பில் பூணூல் இல்லை. ஜடாமுடி தரித்துள்ளது. லிங்கத்தின் கீழ் யோனி பீடம் (ஆவுடை) காணப்படவில்லை.

எனவே அக்காலத்தில் சிந்து சமவெளி நாகரீகத்தில் இருந்தது போல தமிழ்நாட்டிலும் (இந்தியாவின் பிற பகுதிகளிலும்) “ இக்கோவில் கலை காணப்படுகிறது.

உலகின் மிகப் பழமையான சிவ லிங்கம் ‘ஹரப்பா’ வில் உள்ளது.

அதற்கு அடுத்த பழமையான சிவலிங்கங்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளன. ‘குடிமல்லம்‘ என்ற இடத்தில் உள்ள சிவலிங்கம். பழைய எல்லைப்படி இது தமிழகம். இன்றைய எல்லைப்படி இது ஆந்திரா. ஆம் ரேணிகுண்டாவிற்கு அருகில் உள்ள ஊர்.

இந்த குடிமல்லம் சிவன் கோயில் ASI (Archaeological Survey of India) ன் கட்டுப்பாட்டில் உள்ளது.

உலகில் சிவலிங்கத்தை ஆராய்ச்சி செய்பவர்களின் கருத்துப்படி இதுவே மிகவும் பழமையான சிவலிங்கம்.





ஆன்மீகத்தில் முன்னேற விரும்பும் ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் காண வேண்டிய சிவ ஸ்தலம்.

மிகவும் சாதாரணமாக இருக்கும் என்பதற்கு இந்த ஊர் சிவலிங்கம் ஒரு உதாரணம்.

மக்கள் யாரும் இந்த ஊருக்கு வருவதில்லை. நன்கு விஷயம் அறிந்தவர்கள் மட்டுமே இந்த ஊர் கோயிலில் உள்ள சிவலிங்கத்தை காண வருகின்றனர். உண்மை ஆன்மீகத்திற்கான திறவுகோல் இந்த சிவ லிங்கம். உண்மையில் தேடுபவர்களுக்கு மட்டுமே உண்மைப் பொருள் விளங்கும்.




இத்தனை முக்கியமான சிவன் கோயிலுக்கு மக்கள் வருவதே இல்லை.

ஆனால் ரேணிகுண்டாவை தாண்டித்தான் லட்சக்கணக் கானோர் திருப்பதிக்கு செல்கின்றனர்.

அப்படி என்ன இந்த சிவ லிங்கத்தில் உள்ளது என்பது என்பதை காண ஆன்மீக வாதிகள் சென்று முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

ஆன்மீக முன்னேற்றம் பெற விரும்பும் ஒவ்வொருவரும் வாழ்கையில் ஒரு முறையாவது அந்த சிவலிங்கத்தை நேரில் சென்று தரிசனம் செய்ய தவறாதீர்கள்.





# இதய நோய் அகற்றும் இறைத் துதிகள்

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

கலியுகத்தில் இதய நோயால் பலரும் வருந்துவர் என தமது தீர்க்க தரிசனத்தால் உணர்ந்த முனிவர்கள் எம்பிரானிடம் வேண்டி பன்னெடுங்காலம் கடுந் தவம் இயற்றி இருதய நோய் அகல அற்புதமான இறைத் துதிகளைப் பெற்றுள்ளனர்.

நம்பிக்கையுடன் இத்துதிகளை ஓதி வருவோர்க்கு இருதயம் பலம் அடைந்து நன்னிலை அடைவர்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மேலும் இவர்கள் திருச்சி திருவானைக்கோயில் பிரகாரத்தில் உள்ள எட்டுத் திக்கு கொடி மரங் களுக்குச் சுத்தமான 16 பசு நெய் தீபங்களை ஏற்றி வழிபட்டு வருதலால் இதய இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்புகள், வீக்கம் நீங்கி சுகமடைவர்.

## இருதயக் காப்பு மந்திரம்

அங்காதங்கால் லோம்னோ
லோம்னோ
ஜாதம் பர்வணி பர்வணி
யக்ஷ்மம் ஸர்வஸ் மாதாத்
மனஸ்தமிதம்
விவ்ருஹாமி தே
ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

## இதயக் கவசத் துதி தமிழில்

இருதய ஆகாசம் ஈரெட்டு நாளப்
புடைக் கழிய மாதவத்து
வருதல் சிவபோதம் வந்துரைக்கப்
பணித் தலையர் வார்த்த மாவரம்
மருதல மாமரத்துறை மந்தார
மாமறையர் செருத்த வளித்
துறையாம்
சுருதல மாமுனியும் இருதய
ஈசத்தில் எழுந்த பதங் கண்டேன்.





மனித உடலின் பற்பல சிறப்புகளின் ஒன்றே இரத்த ஓட்டத்தை நிர்வகிக்கும் இதயமாகும். இதயம் அல்லது இரத்தத்தை உடலின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய்கள் பழுதடைந்தால் மனிதனின் நிலை என்னாவது? இதைக் குறிப்பதாகவே சித்தர்கள் இதய கமலக் கோலம் என்ற ஒரு சிறப்பான கோல வழிபாட்டை அருளியுள்ளனர். எங்கும் பிரியாத, தொடர்புடைய ஒரே கோட்டினால் ஆன கோலமாகத் திகழ்வதே இந்த இதயக் கோலத்தின் சிறப்பாகும்.

இதயக் கமல கோலத்தை இங்குள்ள வீடியோவில் பார்த்து திருத்தலங்களில் இட்டு வருவதும் இதயத்திற்கு பலமளிக்கும், இதயக் கோளாறுகளுக்கு பலனளிக்கும் ஒரு அற்புத வழிபாடாகும்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

நாயன்மார்களுள் தண்டியடிகள் குருடராய் பிறந்தும் இறைவனுக்கு சேவை செய்து வந்தது நீங்கள் அறிந்ததே. அதே போல் வாயில் நாயனார் தன் இதயத்தில் இறைவனுக்குக் கோயில் கட்டி அதில் இறைவனை எழுந்தருளச் செய்த இனிய வரலாறும் நாம் அறிந்ததே.

இந்த இரு நாயன்மார்கள் முன்பு திருத்தலங்களில் இதயக் கமல கோலத்தை பச்சரிசி மாவால் வரைந்து வழிபடுவதால் இதயக் கோளாறுகளால் வருந்துவோர் நற்பலன் பெறுவார்கள்.

இருதய நோயை தடுக்கும் பரிகாரம்

கண்களை இதயத்தின் வாயில்கள் என்று கூறுகிறோம். உண்மையே. கண்கள் மூலம் காணும் தவறான காட்சிகள் இதயத்தை பலவீனப்படுத்துவதால் குருடர்களுக்கு ஆற்றும் சேவைகள் இதய நோய்களுக்கு துரித நிவாரணம் அளிக்கின்றன.

குருடர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் போன்ற வசதிகள் அளித்தல்

இயன்றபோது அவர்களை திருஅண்ணாமலை, பழநி, நெடுங்குடி போன்ற மலைத்தலங்களுக்கு கிரிவலம் அழைத்துச் சென்று இறை மூர்த்திகளின் அனுகிரகங்களை பெற்றுத் தருதல்

மகாபாரதம், இராமாயணம், ஸ்ரீஅகஸ்திய விஜயத்தில் வரும் அடிமை கண்ட ஆனந்தம் போன்ற சுவையான இறை அனுபவங்களை படித்துக் காட்டுதல்

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

பிரெய்லி கடிகாரங்கள், அபேகஸ் போன்ற கணக்கு கருவிகளை அளித்து அவர்களை ஊக்கப்படுத்துதல்

போன்ற குருடர் சேவைகள் சமுதாயத்தில் அமைதியை ஏற்படுத்துவதுடன் நமது சந்ததிகளுக்கும் இறை பக்தியை ஊட்டும் சாதனங்களாகும்.




# Aanmeega Malar

## English magazine

## covering all spiritual information

For more details

9444228203
(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

**Read on to find out amazing spiritual information**

# ஒவ்வொரு ராசியினர் செய்ய வேண்டிய தான தர்மங்களும் அதனால் கிடைக்கும் பலன்களும்

ஒவ்வொரு ராசிக்காரர்களும் செய்ய வேண்டிய தானங்கள் வரையறுக் கப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:

**மேஷம்:** மேஷ ராசிக்காரர்கள் குல தெய்வ வழிபாட்டை தவறாமல் செய்ய வேண்டும். சிவன்கோவில்களுக்கு சென்று வரும்போது வாசலில் உள்ள ஏழைகளுக்கு தவறாமல் தானம் செய்ய வேண்டும். பணக்காரராக விரும்பும் மேஷ ராசிக்காரர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான பொருட்களை தானம் செய்தால் பலன் கிடைக்கும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

தானம் கொடுப்பதும் நல்லது.

**கடகம்:** கடக ராசிக்காரர்கள் பசுமாட்டுக்கு உணவு தானம் செய்வதை வழக்கமாக கொள்ள வேண்டும். இது குடும்பத்தில் வறுமையை விரட்டி செல்வத்தை சேர்க்க உதவும். மேலும் ஏழை நோயாளிகளுக்கு மருந்து வாங்கி தானம் கொடுத்தால் உங்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைக்கும்.

**சிம்மம்:** சிம்ம ராசிக்காரர்கள் ஏழை எளியோர்களுக்கு அடிக்கடி தயிர் சாதம் தானம் செய்ய வேண்டும். இதனால்

**ரிஷபம்:** ரிஷப ராசிக்காரர்கள் செவ்வாய்கிக் கிழமைகளில் சாம்பார் சாதம் தானம் செய்ய வேண்டும். இதனால் செல்வம் பெருகும். மேலும் ஏழை பெண்களின் திருமணத்துக்கு உங்களால் முடிந்த பொருட்களை தானம் செய்யுங்கள். இதனால் தடையில்லாத முன்னேற்றம் ஏற்படும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

**மிதுனம்:** மிதுன ராசிக்காரர்கள் தவறாமல் பித்ரு வழிபாடு செய்ய வேண் டும். புதன்கிழமைகளில் பெருமாளை தரிசனம் செய்து வெண் பொங்கலை உங்களால் முடிந்த அளவுக்கு தானம் கொடுங்கள். எல்லா வித செல்வமும் தேடி வரும். மேலும் ஏழை மாணவர்களுக்கு படிப்புக்கு பண

உங்கள் மனதில் அமைதி ஏற்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையானதை கேட்டு வாங்கிக்கொடுங்கள். அது புண்ணி யத்தை சேர்க்கும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

**கன்னி:** கன்னி ராசிக்காரர்கள் குரு பகவானை தவறாமல் வழிபடவேண்டும். கோவி லுக்கு வரும் பக்தர்களுக்கு கோதுமையால் ஆன இனிப்பு மற்றும் உணவு பொருட்களை தானம் செய்ய வேண்டும். மேலும் ஏழை மாணவர்களுக்கு நோட்டு, பென்சில், பேனா வாங்கிக் கொடுக்காலாம்.

**துலாம்:** துலாம் ராசிக்காரர்களுக்கு விநாயக வழிபாடு கைகொடுக்கும். அடிக் கடி ஏழை எளியோர்களுக்கு வெண் பொங்கல்தானம் செய்யுங்கள். இதனால்

புதிய சொத்துக்கள் வந்து உங்களுக்கு சேரும். மேலும் ஆதரவற்ற இல்லங்களில் தங்கி படிக்கும் மாணவ மாணவிகளுக்கு படிப்பு உதவித்தொகை தானமாக கொடுத்தால் உங்கள் வாரிசுகளுக்கு நல்லது.

**விருச்சகம்:** விருச்சக ராசிக்காரர்கள் தங்களால் இயன்ற அளவு மாற்றுத்திறனாளிகளுக்கு தானம் செய்ய வேண்டும். கடன்கள் தீர லட்சுமி நரசிம்மரை வழிபட்டு பானகம் தானம் செய்யலாம். மேலும் அம்மன் கோவிலுக்கு



வரும் பக்தர்களுக்கு சர்க்கரை பொங்கல் தானம் செய்தால் பண வரவு அதிகரிக்கும்.

**தனுசு:** தனுசு ராசிக்காரர்கள் தவறாமல் முருகனை வழிபட வேண்டும். குருபகவானுக்கு கொண்டை கடலை மாலை அணிவித்து பிறகு பக்தர்களுக்கும் தானம் செய்யலாம். வாரம் ஒரு முறை செவ்வாய் அல்லது வெள்ளியில் துர்க்கை அம்மனுக்கு மலர் தானம் செய்யலாம். மேலும் செவ்வாய்க் கிழமைகளில் சாம்பார் சாதம் தானம்செய்தால் வாழ்வு செழிக்கும். மேலும் வயதான பெண்களுக்கு தானம் செய்தால் நல்லது.

**மகரம்:** மகர ராசிக்காரர்கள் ஏழை பெண் களின் திருமணத்துக்கு உங்களால்



முடிந்ததை தானமாக கொடுக்க வேண்டும். மேலும் வாயில்லா ஜீவன்களுக்கு தீவனம் வாங்கி கொடுக்கலாம். கோவில்களில் சீரமைப்பு பணிகள் நடக்கும்போது தானம் செய்தால் வீட்டில் லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

**கும்பம்:** கும்ப ராசிக்காரர்கள் குலதெய்வ வழிபாடை மறக்காமல் செய்ய வேண்டும். ஏழை களுக்கு கதம்ப உணவை அடிக்கடி தானமாக கொடுக்க வேண்டும். இதனால் உங்களுக்கு வரும் பண வரவு இரட்டிப்பாகும். மேலும் ஏழை நோயாளிகளுக் மருந்து மாத்திரி வாங்கி கொடுத்தால் வளமான வாழ்வு அமையும்.

**மீனம்:** மீன ராசிக்காரர்கள் பவுர்ணமி நாட்களில் சிவ தரிசனம் செய்வது நல்லது. ஏழை மாற்றுத்திறனாளிகளுக்கு உதவினால் புண்ணியம் அதிகரிக்கும். மேலும் நல்லெண்ணை தீபம் தானம் செய்யலாம். அய்யப்ப பக்தர்களுக்கு உதவினால் கூடுதல் நன்மை உண்டாகும்.

தானம் கொடுக்கும்போது எந்த வித விளம்பரமும் இன்றி கொடுக்க வேண்டும். பத்துரூபாய் செலவில் ஒரு பொருளை கொடுக்க ஆயிரம் ரூபாய் விளம்பரம் செய்து கொடுக்கும் தானத்தால் எந்த பலனும் கிடைக்காது.

# காசியில் முக்கியத்துவம் வாய்ந்த சிவன் கோவில்கள்




e-magazine
aanmeegamalar.com

## தர்மேஸ்வரர்

காசியில் உள்ள பல்வேறு முக்கியமான சிவலிங்கங்களை விவரிக்குமாறு பார்வதி தேவி சிவபெருமானிடம் கேட்டார். சிவபெருமான் அவளிடம் கூறினார், ஒரு காலத்தில், ஆனந்த வனத்தில் (காசியில்) எம ராஜர் ஒரு லிங்கத்தை நிறுவி, சிவபெருமானை வேண்டி கடுமையான தவம் செய்தார். அவரது பிரார்த்தனைகள் மிகவும் குளிர்ந்த குளிர்காலம் மற்றும் கடுமையான கோடை காலங்களில் தொடர்ந்தன.

அவருடைய பிரார்த்தனையின் தீவிரம் அதிகரித்துக்கொண்டே சென்றது; அவர் ஒற்றைக் காலில் நின்று பல வருடங்கள்



பிரார்த்தனை செய்து கடைசியாகத் தவத்தின் போது பல நாட்கள் ஒற்றைக் கால் விரலில் நின்றார்.

கடைசியில் சிவபெருமான் அவர் முன் தோன்றி எம ராஜாவுக்கு தர்மராஜா என்ற பட்டத்தை வழங்கினார். (சந்தியா வந்தனம் போன்ற சில மந்திரங்களில், யமாய மி தர்ம ராஜாய போன்ற மந்திரம் சொல்லப்படுகிறது.) எம ராஜர் நிறுவிய லிங்கத்திற்கு சிவபெருமான் தர்மேஸ்வர லிங்கம் என்று பெயரிட்டார். சிவபெருமானை நேரில் பார்த்த எம ராஜர், தனக்கு என்ன வேண்டும் என்று கேட்க முடியாமல் திகைத்துப் போனார். அவர் மகிழ்ச்சியில் மூழ்கினார்.

சிவபெருமான் முன்முயற்சி எடுத்து, இறந்தவர்களுக்கு சரியான நீதி வழங்க வேண்டும், பாவம் செய்பவர்கள் நரகத்தில் தண்டனையை எதிர்கொள்ள வேண்டும், மற்றும் புண்ணிய கர்மா செய்பவர்கள் சொர்கத்திற்கு செல்ல வேண்டும் என்று எம ராஜரிடம் கூறினார். தீர்ப்பு நியாயமாக இருக்க வேண்டும். காசியில் வசிப்பவர்கள், பூஜை முதலியவற்றில் ஈடுபடுபவர்கள் எந்தத் தலைமுறையிலும் செய்த பாவங்களில் இருந்து விடுபட வேண்டும். எம ராஜர் என்பது தீயவர்களுக்கு/பாவிகளுக்கு, அவர் நல்லவர்களுக்கு தர்ம ராஜர்.

காசி காண்டம், அத்தியாயம் 78 இன் படி, ஸ்நானம் தர்ம கூப்பில் செய்வதும், தர்மேஸ்வரரை பூஜை செய் வதும் எல்லா பாவங்களையும் போக்குகிறது.

காசியில் வசிப்பவர்கள், வழக்கமான பூஜைகள் போன்றவற்றைச் செய்வதால் சகல பாவங்களும் நீங்குவதாக இன்றும் நம்பப்படுகிறது.

லிங்க புராணம் தர்மேஸ்வர லிங்கத்தை புகழ்ந்து பேசுகிறது, இந்த லிங்கத்தை வழிபடுவதன் மூலம் பக்தர்களின் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும் என்று கூறுகிறது.

தர்மேஸ்வரர் கோயில் டி2/21, மீர்காட்டில் அமைந்துள்ளது. தசாஸ்வமேத் என்ற புகழ்பெற்ற இடத்திலிருந்து இந்த கோவிலுக்கு அணுகலாம். மக்கள் ரிக்ஷாவில் தசாஷ்வமேத் விஸ்வநாத் கல்லி வரை பயணிக்கலாம், பின்னர் பிரசித்தி பெற்ற விசாலாக்ஷி கோயில் வழியாக நடந்தே



e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.







e-magazine
aanmeegamalar.com

கோயிலுக்குச் செல்லலாம். மாற்றாக, அவர்கள் படகில் மிர்காட் சென்று படிகளில் ஏறலாம்.

தர்மேஸ்வரர், தர்ம கூப், விசாலாக்ஷி தேவி போன்றவற்றை உள்ளடக்கிய முழுப் பகுதியும் ஒரு சக்தி வாய்ந்த சக்தி பீடம் மற்றும் இந்த இடத்தில் செய்யப்படும் எந்த பிரார்த்தனையும் பக்தர்களுக்கு அதிகபட்ச பலன்களைத் தருகிறது.

### பூஜைகளின் வகைகள்

ஆலயம் காலை 05.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை, மாலை 05.00 மணி முதல் இரவு 08.30 மணி வரை வழிபாட்டிற்காக திறந்திருக்கும். காலை 05.00 மணிக்கும் மாலை 07.00 மணிக்கும் ஆரத்திகள் செய்யப்படுகின்றன.

கார்த்திகை மாதம் (அக்டோபர் 20நவம்பர் 20), சுக்ல பக்ஷ அஷ்டமி, அமாவாசைக்குப் பிறகு 8 வது நாளில் தர்மேஸ்வரர் கோவிலில் பூஜை செய்வது மிகவும் மங்களகரமானதாக கருதப்படுகிறது.

அருகில் தர்ம கூப் எனப்படும் கிணறு உள்ளது. தர்ம கூப்பில் குளித்த பிறகு இங்கு செய்யப்படும் ஸ்ரார்த்த கர்மா கயாவில் ஸ்ரார்த்தம் செய்வதற்கு சமம். விசேஷ பூஜை முதலியன செய்வதற்கு முன் பூஜாரியிடம் ஆலோசனை பெறுவது நல்லது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# மறந்து போன "சனி நீராடு...."

பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, ரொம்ப கஷ்டப்பட்டு எழுந்தார் ஒரு பக்தர்!

நடு முதுகுத்தண்டில் தாங்க முடியாத வலி!

"நடு முதுகுல... பயங்கர வலி பெரியவா..! எல்லா வகை... வைத்தியமும் பாத்தாச்சு! ஒண்ணும் கேக்கல! பணம் கரைஞ்சது தான் மிச்சம்! வலி போகல!...பெரியவாதான் இத.. குணப்படுத்தணும்" என்றார்.

அவர் முகத்தில் வேதனை தெரிந்தது.

உடனே பெரியவாள் "முன்னெல்லாம்.....செக்குல ஆட்டின நல்லெண்ணெய் தேச்சு, கொஞ்சம் ஊற வச்சு, வெந்நீர்ல... சீக்காயோ, அரப்போ தேச்சு குளிப்பா! இப்போ அவசர யுகம்! எண்ணெய் தேச்சு குளிக்கவே டைம் இல்ல.! "சனி நீராடு"ன்னு... ஸ்கூல்ல படிக்கறதோட செரி. (இப்போ அந்த படிப்பும் இல்லை)

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

அத... follow பண்ணணுங்கறது மறந்து போச்சு! அரப்பு, சீயக்கா பொடிக்கு பதிலா, தலைக்கு தேச்சுக்க என்னென்னமோ வந்திருக்காம்....! எல்லாம் கெமிக்கல்ஸ் சேந்தது.! பின்னால.... கெடுதின்னு தெரிஞ்சாலும், அதையேதான் வாங்கறா...! போகட்டும் போ! நீ இனிமே.... ரெகுலரா.... எண்ணெய் தேச்சுண்டு, வெந்நீர்ல குளி! மிளகு ரசம், பெரண்டை துவையல் பண்ணி சாப்டு..! என்ன?" என்றார்.

"கட்டாயம் பெரியவா சொன்னபடியே பண்றேன்" என்றார் அந்த பக்தர்.

மூணு மாதம் கழித்து வந்தார் முதுகுவலிக்காரர். வலி போய்விட்டதாம்.!

எண்ணெய் தேச்சு வெந்நீர்ல குளியல், மிளகு ரசம், பெரண்டை துவையல் இந்த மூன்றின் சேர்க்கை பற்றி யார் ஆராய்ச்சி பண்ணினால் என்ன, பெரியவா சொன்ன சிம்பிள் வைத்தியம் கை மேல் பலன் கொடுத்திருந்தது.

பெரியவா திருவாக்கிலிருந்து சில health tips...

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வீடுகள்ல, மூணு எண்ணெய் எப்பவும் இருக்கணும்......

1. நல்லெண்ணெய் விளக்கேத்த, சமையல் பண்ண, எண்ணெய் தேச்சு குளிக்க;

2. விளக்கெண்ணெய் வருடத்தில் ரெண்டு தரம், காலைல வெறும் வயித்துல குடிச்சா..... வயிறு செரியா இருக்கும். வயித்துவலி இருந்தா, கொஞ்சம் விளக்கெண்ணெய் எடுத்து தொப்புளை சுத்தி நன்னாத் தடவிண்டா செரியாப் போய்டும். சூடு தணியும். பாதத்ல வெடிப்புகிடிப்பு, புண்ணு இதெல்லாம் வராது.


3. வேப்பெண்ணெய் வேப்பெண்ணையை தெனமும் கை,கால், முட்டிகள்ல தடவிண்டா, முட்டி வலி வரவே வராது.

[பெரியவாளும் தினமும் கை, கால் முட்டியில், வேப் பெண்ணெய் தடவிக்கொண்டு குளிப்பாராம்]

தெனமும் குளிச்சதும், ரெண்டு காலையும், பாதத்தையும் நன்னாத் தொடச்சுக்கணும். நம்ம ஒடம்புல, காலுதான் முக்யமான பாகம். பாதத்தை நன்னா கவனிச்சுண்டா, ஒடம்பும் நன்னா இருக்கும். ராத்திரி படுத்துக்கறதுக்கு முன்னாடி, பாதத்தை நன்னா அலம்பிண்டு, ஈரம் போகத் தொடச்சிண்டு படுத்துக்கணும்.

அந்த காலங்கள்ல, வெளியிலேர்ந்து வந்தா... குடிசைவாசிகள் கூட, வாய் கொப்பளிச்சுட்டு, கைகால், குதிகால்.... அலம்பிண்டு தான் வீட்டுக்குள்ளயே நொழைவா!

இப்போ...? செருப்பே.... வீட்டுக்குள்ளதான கெடக்கு! பின்ன...ஏன் வியாதி வராது? என்று கூறுகிறார் மஹா பெரியவாள்.



ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# காரிய சித்திக்கு மன செம்மையே மூல மருந்து

கடவுள் உருவாக்கிய மதம்

நேற்று வரை மிகவும் சாதாரண நிலையில் இருந்த ஒரு மனிதன் இன்று பார்க்கும் போது முன்னேற்றத்தின் சிகரத்தில் இருக்கிறான் அதை கண்டவுடன் நமக்கு என்ன தோன்றுகிறது? நம்மோடு சாதாரணமாக சுற்றி திரிந்தவன் வாய்க்கால் வரப்பு என்று அலைந்தவன் இன்று எப்படி உயர்ந்து விட்டான்? ஒருவேளை இவனுக்கு புதையல் கிடைத்திருக்குமோ? அல்லது கூரையை பிரித்து கொண்டு தெய்வம் கொட்டும் என்பார்களே அதே போல எதாவது நடந்திருக்குமோ? என்று நினைப்போம். அல்லது நமக்கு சற்று அதிகமாக கோணல் புத்தி இருந்தால் ஒருவேளை இவன் கள்ளநோட்டு அடித்திருப்பானோ? யாரும் அசந்திருக்கும் போது திருடி கொண்டு வந்திருப்பானோ? என்று கூட தோன்றும். உண்மையில் ஒருவன் உயர்வதற்கு இவைகள் எதுவும் சரியான வழி யில்லை. பிறகு மனிதன் முன்னேறுவதற்கு எது தான் வழியாக இருக்கும்? என்று யோசிக்க வேண்டும்.

பதறும் காரியம் சிதறும் என்று சொல்வார்கள் இதையே வட மொழியில் விநாசகாலே விபரீத புத்தி என்று அழைப் பார்கள் அதாவது ஒரு காரியம் தோற்க வேண்டுமென்றால் அதற்கு வெளியிலிருந்து எதிர்ப்புகளும் இடையூறுகளும் வரவேண்டும் என்ற அவசியம் இல்லை காரிய கர்த்தாவின் மனம் குழம்பினாலே போதும் அனைத்தும் கெட்டுவிடும். அல்லது மனதில் நிலையற்ற எண்ணங்கள் தோன்றுவதே ஓடி கொண்டிருக்கின்ற குதி ரையை குப்புற தள்ளுவதற்கு என்றும் சொல்லலாம். ஆகவே ஒரு செயல் வெற்றியை நோக்கி செல்வதற்கும் செல்லாத தற்கும் பல வகையில் நேரடி காரணமாக இருப்பது நமது மனமே ஆகும். நம் மனம் மட்டும் செம்மை பட்டுவிட்டால் எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியில் முடியும். வெற்றியான காரி யங்கள் தொடர்ந்து நடந்தால் தானே வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கும்.

எனவே ஒருவன் முன்னேறுகிறான் என்று சொன்னால் அவனது மனம் செம்மையடைந்து செயல்களை செய்திருக்கிறான் அதனால் அவன் வாகை சூடி இருக்கிறான் என்பது தான் உண்மை. பலரும் மனமது செம்மையாக வேண்டும் என்று மாறி மாறி சொல்கி றார்களே மன செம்மை என்பது என்னவாக



ஆன்மீகமலர்

இருக்கும் என்று கேள்விகள் பிறக்கும் காரணம் செம்மை என்ற ஒரு வார்த்தை பல பொருளை தரும் அனைத்தும் சீராக இருக்கிறது சிறப்பாக இருக்கிறது என்ற பொருளும் செம்மை என்ற வார்த்தைக்கு உண்டு. ஆனால் மன செம்மை என்று வருகின்ற போது அது வேறு விதமான பொருளை தருகிறது. ஆர்வம், உத்வேகம், சிரத்தை என்ற பல பொருளையும் அதற்குள் பொருத்தி பார்க்க வேண்டும். அப்படி பார்த்தால் மட்டும் தான் சரியான பதில் நமக்கு கிடைக்கும்.

படிக்காமல் தெருவில் சுற்றி கொண்டிருக்கும் ஒரு பையனை பிடித்து உனக்கு ஏன் படிக்க பிடிக்கவில்லை என்று கேட்டு பாருங்கள் பாடங்களை மனப்பாடம் செய்ய சொல்கிறார்கள் அது என்னால் முடியவில்லை அதனால் தான் நான் பள்ளிக்கூடம் போகவில்லை என்ற பதிலை தருவான் அவனிடமே நேற்று பார்த்த திரைப்படத்தில் உள்ள புரியாத பாடல் ஒன்றை கேட்டு பாருங்கள் நமக்கே புரியாத வார்த்தைகள் எல்லாம் அவனுக்கு புரிந்திருக்கும் ஒரு வரியை கூட விடாமல் ஏற்ற இரக்கத்தோடு அழகாக சொல்வான். பாடங்களை மனப்பாடம் செய்ய இயலாத அவனுக்கு திரைப்பட பாடலை மனனம் செய்ய எப்படி முடிந்தது? விஷம் ஒன்றுமில்லை முன்னது செய்வதில் அவனுக்கு ஆர்வமில்லை பின்னது செய்வதில் ஆர்வம் அதிகம் இருக்கிறது. ஆகவே ஒரு மனிதனுக்கு எதில் ஆர்வம் இருக்கிறதோ அதில் அவன் விரைந்து முன்னேறுவான் எனவே தான் ஆர்வம் உத்வேகம் சிரத்தை என்ற பல பொருளை செம்மை என்ற ஒரே வார்த்தைக்குள் வைத்து காரிய சித்திக்கு மன செம்மையே மூல மருந்து என்று நமது பெரியவர்கள் சொன்னார்கள்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்றால் ஆர்வத்தோடும் சிரத்தையோடும் காரியங்களை செய்தாலே போதும் எத்தகைய எதிர்மறையான சூழல்கள் இருந்தாலும் அத்தனையையும் தாண்டி வெற்றி பெறலாம் என்ற ரகசியம் தெளிவாகவே புரிகிறது. இது புரியாமல் தான் பலர் வாழ்க்கை சவால்களோடு முட்டி மோதி மண்டையை உடைத்து இரத்தம் வடிய படுக்கையில் கிடக்கிறார்கள் தேங்காய் வியாபாரம் பண்ண சொல்லி ராமசாமி சொன்னார் அதையும் நம்பி நான் செய்தேன் வாங்கி வந்த தேங்காய் எல்லாம் தென்னம்பிள்ளையாக மாறியதே தவிர ஒன்றுமே விற்கவில்லை நகைகளை வாங்கி விற்கலாம் நல்ல லாபம் வரும் பொருளும் கெட்டு போகாது என்று மாடசாமி சொன்னார் அதையும்



செய்தேன் கடையில் நான் மட்டுமே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் ஒரு ஈ எறும்பு கூட வந்து எட்டி பார்க்கவில்லை என்று சோக கதையை பக்கம் பக்கமாக சொல்பவர்கள் ஒரு நிமிடம் சிந்திக்க வேண்டும் யாரோ சொன்னார்கள் செய்தேன் என்பதை விட்டு விட்டு எனக்கு பிடித்ததை எனக்கு தெரிந்ததை செய்தேனா என்பதை சிந்தித்து பாருங்கள் தோல்வியின் ரகசியம் தெரியும். காரணம் மனம் ஈடுபாடு இல்லாமல் எதை செய்தாலும் அது சந்தேகமே இல்லாமல் குப்பை தான் சிரத்தையோடு செய்தால் உறுதியான கற்பாறை கூட உருகிவிடும்.

சிரத்தை என்பது ஒரு உன்னதமான மனோநிலை தெய்வத்திடம் வரம் கொடு என்று கேட்பவர்கள் அதை கொடு இதை கொடு என்று தாறுமாறாக கேட்கவேண்டிய அவசியம் இல்லை சிரத்தையை கொடு என்று கேட்டாலே அனைத்தும் கிடைத்துவிடும். சிரத்தை என்ற ஒன்று வந்துவிட்டால் எடுத்த காரியத்தில் முனைப்போடு இருக்கும் விழிப்புணர்வு வந்துவிடும். விழிப்பு வந்துவிட்டால் விசுவாசம் என்ற நம்பிக்கை பிறந்து விடும். நம்பிக்கை வந்தால் நான் தான் பெரியவன் என்ற ஆணவ குப்பையெல்லாம் மறைந்து பணிவு தானாக வளர துவங்கி விடும். பணிந்தவன் நிமிர்ந்து விடுவான் என்பது அனுபவ சாட்சி. அதனால் தான் உலகத்தை படைத்து காத்து இரட்சித்து கொண்டிருக்கும் முழுமுதற்க் கடவுளான கண்ணபெருமான் தமது பகவத் கீதையில்

**அச்ரத்யா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதஞ்ச யத்அஸதித்யுச்யதே பார்த்த நசதத் ப்ரேத்ய நோ இஹ**

என்று தெளிவாக பதினேழாம் அத்தியாயம் இருபத்தி எட்டாவது ஸ்லோகத்தில் சொல்கிறார். அதாவது சிரத்தை இல்லாமல் செய்யப்பட்ட தவமும் அனுஷ்டிக்க பட்ட கர்மமும் அஸத் என்று கருதபடுகிறது. அது வேறு எங்கு சென்றாலும் பயன்படாது இந்த உலகிலும் பயன்பாடாது என்பது பொருளாகும். நான் தவம் செய்கிறேன் தியானம் செய்கிறேன் என்று அறுபது நாழிகையும் கண்களை மூடி கொண்டு பத்மாசனத்தில் அமர்திருந்தாலும் கூட சிரத்தை என்ற ஒன்று இல்லை என்றால் எந்த பயனும் கிடைக்காது. சிரத்தை இல்லாமல் செய்கின்ற தியானமும் தவமும் கூட கைகூடி வராது என்கிற போது மற்ற செயல்கள் மட்டும் எப்படி வெற்றியை தேடி தரும். எனவே அனைத்து காரியத்திற்கும் சிரத்தை என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஆன்மிகமலர்

இதை நன்கு அறிந்திருந்த நமது முன் னோர்கள் மனிதன் செய்ய கூடிய அனைத்து காரியங்களையும் சிரத்தை வேண்டும் என்று கருதியதோடு மட்டுமல்லாது தனக்கு உடம்பையும் உடமைகளையும் தந்து சுக ஜீவியாக வாழ வைத்திருக்கும் முன்னோர்களை நினைத்து பார்ப்பதை கூட சிரத்தை என்ற பொருள்பட சிரார்த்தம் என்று அழைத்தார்கள். சிரார்த்தம் என்றால் இறந்தவர்களை வணங்குதல் மட்டுமே என்று பலர் நினைப்பது மிகவும் தவறு. சிரார்த்தம் என்ற பதம் நன்றி உணர்ச்சியை கூட ஆர்வத்தோடு காட்ட வேண்டும் என்பதை சுட்டி காட்டுவதற்கே அமைந்ததாகும். அதனால் தான் இந்து மதத்தின் அல்லது இந்து மக்களின் ஆதாரனமான கடமைகளில் ஒன்றான முன்னோர் வழிபாட்டை சிரார்த்தம் என்ற அர்த்தம் பொதிந்த வார்த்தையால் அழைத்தார்கள்.

முன்னோர்கள் என்பவர்கள் நமக்கு முன்னால் வாழ்ந்தவர்கள் மூத்த குடி என்பதோடு மட்டும் கருத தக்கவர்கள் அல்ல நாம் வாழுகின்ற வாழ்க்கை அவர்கள் போட்ட பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறது தான் நடந்து சென்ற பாதையில் உள்ள கற்களையும் முற்களையும் அவஸ்தை பட்டு அகற்றி நாம் நடந்து செல்ல சுகமான பாதையை உருவாக்கி கொடுத்தவர்கள். தங்களது வியர்வையாலும் இரத்தத்தாலும் நம்மை வெயில் படாமலும் குளிர்வாட்டாமலும் பாதுகாப்பு தந்தவர்கள் சோகங்களை மட்டும் தான்



சுமந்து கொண்டு சுகங்களை மட்டும் நமக்கு விட்டு சென்றவர்கள். அப்படி பட்ட தியாக ஆத்மாக்களை நன்றியோடு நினைத்து பார்ப்பதே சிரார்த்தம் எனப்படும் மனித வாழ்விற்கு நன்றி உணர்வு என்பது மிகவும் அவசியம் காமம் உட்பட அனைத்து உணர்வுகளையும் நாம் அடக்கலாம் கடந்தும் செல்லலாம். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் நன்றி உணர்வை அடக்கவும் கூடாது மறக்கவும் கூடாது.

**தென்புலத்தார், தெய்வம், விருந்தொக்கல், தானென்றாங்க ஐம்புலத்தா றோம்பல் தலை**

என்று வள்ளுவனும் மனிதனுக்கு உரிய ஐந்து கடமைகளில் முன்னோர்களை நன்றியோடு நினைத்து பார்ப்பதை முதல் கடமை தலையாய கடமை என்று சொல்வ திலிருந்தே மூத்தோர்களை வழிபடுவதில் உள்ள சிறப்புகளை நன்கு அறியலாம். மனிதன் வாழ்ந்து இறந்து போகிறான் அதோடு ஒரு ஆத்மாவின் பயணமானது நின்று போகிறது அதற்கு மேல் ஒன்றுமே இல்லை இதில் அவர்களது செயல்களுக்காக நன்றி தெரிவிப்பது மனதோடு இருக்க வேண்டியதே தவிர வெளிப்புறமாக காட்டுவதில் என்ன இருக்கிறது. என்று பேசுவதெல்லாம் பொருள் மட்டுமே இருப்பது அது மட்டுமே புலங்களுக்கு அகப்படுவது அதை தாண்டி உண்மைகள் எதுவும் இல்லை என்று பேசும் வறட்டு சித்தாந்தமாகும். ஆத்மாவின் பயணம் மரணத்தோடு நின்றுவிடுவது அல்ல அதையும் தாண்டி செல்ல கூடியது என்ற உண்மை தெரிந்தால் மட்டும் தான் தனிமனித வாழ்விலும் ஒழுக்கம் இருக்கும் சமூதாய வாழ்விலும் இணக்கம் இருக்கும். அதை விட்டு

e-magazine
aanmeegamalar.com



விட்டு கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்வதை நமது இந்து மதம் கண்டனம் செய்கிறது.

இந்துமத சாஸ்திரப்படி நாம் யாரை உத்தேசித்து சிரார்த்தம் செய்கிறோமோ அவர் ஆவி உலகம் என்ற பிதுர் உலகத்தில் இருக்கலாம் அல்லது அதையும் தாண்டிய தெய்வ உலகத்தில் இருக்கலாம் இப்படி கண்ணுக்கு தெரியாத காட்சிக்கு அகப்படாத உலகங்கில் இல்லாமல் நாம் நேரடியாக கண்டு உணர கூடிய இந்த பூமியில் இந்த மனித உலகில் நம்மை போல சாதாரண மனித பிறப்பெடுத்து வாழ்ந்து கொண்டு கூட இருக்கலாம். அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்காக நாம் செலுத்தும் நன்றி கடனான சிரார்த்தம் அவர்களுக்கு பல உயர்வுகளை கண்டிப்பாக தந்தே தீரும். அவர்கள் இருக்கும் இடம் எது வாக இருந்தாலும் அவர்கள் தாழ்ந்த நிலை யிலோ உயர்ந்த நிலையிலோ எந்த நிலையில் இருந்தாலும் சிரார்த்தம் அவர்களை கைதூக்கி விடும்.

உயர்வான தகுதி அவர்களிடம் இருந்தால் நாம் செய்யும் சிரார்த்தத்தால் மன மகிழ்ந்து ஆசிகளை நமக்கு தருவார்கள் தாழ்ந்த நிலையில் இருந்தால் தன்னுடைய நிலையை உயர்த்தி கொள்வார்கள் மனிதனாக எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் கூட இந்த சிரார்த்தம் அவர்களை சென்றடைந்து அவர்களுக்கு தேவை பட்டதை கண்டிப்பாக செய்யும்.

வாழ்க்கை என்பது கண்ணுக்கு தெரியாத ஒரு பிரம்மாண்டமான தேர் அந்த தேரை கரடு முரடான பாதையில் ஒட்டி செல்வதற்கு திறமை வாய்ந்த சாரதி மட்டும் இருந்தால் போதாது முரட்டு தனமான வலுவுடைய குதிரைகளும் வேண்டும். இங்கு குதிரைகள் என்பது நமது பாவ புண்ணியம் இறைவனின் அருள் சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பு என்று பலவற்றை குறிக்கும். அந்த பல காரணங்களோடு முன்னோர்களின் ஆசி என்ற குதிரையும் கண்டிப்பாக தேவை அந்த ஆசியை பெற்று தருவதே சிரார்த்தமாகும் அந்த சிரார்த்தத்தை கடமை என்று உணர்ச்சி இல்லாமல் செய்வதை விட்டு விட்டு உணர்ச்சி பூர்வமாக ஆர்வத்தோடு செய்தால் மட்டுமே நல்ல பலனும் நல்லதும் கிடைக்கும். அதனால் தான் இந்து மதம் அகவுலக வாழ்க்கையும் புறவுலக வாழ்க்கையும் ஒன்றாக இணைத்து முன்னோர்கள் வழிபாட்டை உறுதியாக வற்புறுத்துகிறது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இறந்து போனவனை கண்டு பயந்தால் அந்த ஆத்மாவை சாந்த படுத்துவதில் சடங்குகளை செய்வதிலேயே இந்துக்கள் நின்றிருப்பார்கள். நன்றி உணர்ச்சியை மருந்துக்கு கூட நினைத்து பார்த்திர்க்க மாட்டார்கள். இந்து என்பவன் சகிப்பு தன்மை மட்டுமே கொண்டவன் அல்ல சமாதான சகவாழ்வு மட்டுமே அவனது குறிக்கோளும் அல்ல இவைகள் அனைத்தையும் தாண்டி நடந்ததை நடக்க போவதை எண்ணி பார்த்து ஆராய்ந்து அதற்க்கான சரியான மருந்தை கண்டு பிடித்து தானும் உயர்ந்து மற்றவர்களையும் உயர்த்துவதே அவனது நோக்கம். அந்த நோக்கத்தின் சீரிய அடையாளமே சிரார்த்தமாகும். சிரார்த்தம் செய்வதில் ஆயிரம் சடங்குகள் உண்டு பலநூறு சம்பிராதயங்கள் உண்டு அவைகள் இடத்திற்கு இடம் பண்பாட்டுக்கு பண்பாடு மாறுபட்டு ஒன்றுகொன்று சம்மந்தம் இல்லாமல் இருந்தால் கூட அனைத்திற்குள்ளும் ஒன்றாக இணைக்கும் ஒரு மெல்லிய இழை உண்டு அது தான் நன்றி பாராட்டுதல் என்ற உயர்ந்த பண்பாகும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

e-magazine
aanmeegamalar.com

# அறியாமல் பாவம் செய்தாலும்

# அதற்கான பலனை அனுபவிக்க வேண்டும்

e-magazine

aanmeegamalar.com

அறிந்து செய்யவில்லை என்றாலும் அவனே குற்றவாளி ஆகிறான்! குருக்ஷேக்ஷேத்திர யுத்தம் முடிந்தது. கௌரவர்கள் பூண்டோடு அழிந்தனர். பகவான் கிருஷ்ணரின் உதவியால் பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். அவரது வழிகாட்டுதலுடனும் கருத்தொருமித்த சகோதரர்களின் ஒற்றுமையாலும் அஸ்தினாபுரத்தின் சக்ரவர்த்தியாக முடி சூட்டப்பட்டார் தருமபுத்திரர்.


இதையடுத்து பகவான் கிருஷ்ணரின் தலைமையில், சகோதரர்கள் புடைசூழ, தனது பெரிய தகப்பனாரான திருதராஷ்டிரரிடம் ஆசி பெற வந்தார் தருமர்.

துர்க்குணம் கொண்ட துரியோதனன் முதலான கௌரவர்களுக்குத் தந்தையாக இருந்தாலும் திருதராஷ்டிரர் இயல்பிலேயே நற்குணம் மிக்கவர். தன் சகோதரனான பாண்டுவின் மைந்தர்களிடம் அன்பும் பாசமும் கொண்டவர்.

பாண்டவர்களுக்காகத் தன் மகன்களிடம் அவர் பலமுறை பரிந்து பேசியும் பலன் இல்லை. விளைவுஞ் யுத்தம்! அதில், மகன்கள் அனைவரையும் பறி கொடுத்த துக்கத்தில் ஆழ்ந்திருந்தார் திருதராஷ்டிரர்.

இந்த நிலையில்தான் அவரைச் சந்திக்க வந்தனர் பாண்டவர்கள். தம்மை வணங்கி நிற்கும் கிருஷ்ணரையும் பாண்டவர்களையும் கண்ட திருதராஷ்டிரர் துக்கம் தாளாமல் கதறி அழுதார்.


பகவான் கிருஷ்ணரும் தருமரும் நீதிநெறிகளை எடுத்துச் சொல்லி அவரைத் தேற்றினர். சற்று ஆறுதல் பெற்ற திருதராஷ்டிரர், ''கிருஷ்ணா! நீயே பரம புருஷன். இந்த உலகில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் நீயே காரணமானவன். உனையன்றி ஓர் அணுவும் அசைவதில்லை. துரோணர், பீஷ்மர் முதலான பெரியோர்களது ஆலோசனைப்படி நல்லாட்சி செய்ததால், என்



தேசத்து மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். சிறந்த அரசன் என்று பெயர் பெற்ற எனக்கு, இவ்வளவு பெரிய துன்பம் எதனால் ஏற்பட்டது?'' என்று துக்கத்துடன் கேட்டார்.

உடனே, ''சக்ரவர்த்தியே, வேறு விஷயங்களைப் பேசி, துக்கத்தைக் கொஞ்சம் மறக்கலாமே!'' என்ற கிருஷ்ண பரமாத்மா தன் பேச்சைத் தொடர்ந்தார்: ''பாண்டுவின் மைந்தரான தரும புத்திரர் அரச பொறுப்பு ஏற்றுள்ள இந்த தருணத்தில், அரச நீதி குறித்து எங்களுக்கு ஒரு சந்தேகம். அதை, தாங்கள்தான் களைய வேண்டும்!'' என்றார் கிருஷ்ணர். ''அப்படி என்ன சந்தேகம் பரந்தாமா?'' திருதராஷ்டிரர் கேட்டார்.

“ஒரு கதை சொல்கிறேன். அதிலேயே எங்களது சந்தேகமும் அடங்கி இருக்கிறது'' என்ற



கிருஷ்ணர், கதையை விவரித்தார்: ”அந்த அரசன், மிக நல்லவன். நீதிநெறி பிறழாமல் ஆட்சி புரிந்து வந்தான். சைவ நெறிப்படி வாழ்ந்தவன். ஆனால், அரண்மனையில் உணவு தயாரிக்கும் சமையற்காரனோ அசைவப் பிரியன்! அசைவம் தயாரிப்பதில் கைதேர்ந்தவன்.

அவன் சமைக்கும் உணவைச் சாப்பிட்டுப் பார்க்கும் ஒருவருக்கு அது சைவமா, அசைவமா என்று கண்டறிய முடியாது. இந்த ஆசாமிக்கு ஒரு விபரீதமான கொடூரமான ஆசை வந்து விட்டது. அதாவது, அசைவ உணவை சைவம் போல் தயாரித்துக் கொடுத்து அரசனைச் சாப்பிட வைக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

அரசன், தனது அரண்மனையில் சாதுவான மிருகங்களையும் பல அதிசயப் பறவைகளையும் வளர்த்து வந்தான். அவற்றில் ஓர் அன்னப் பறவையும் உண்டு. அது, தினமும் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொறித்து வந்தது. ஒரு நாள், இந்த அன்னப் பறவையின் குஞ்சு ஒன்றைப் பிடித்து வந்த சமையற்காரன், அசைவ உணவு என்று அறிய முடியாதபடி பக்குவமாகச் சமைத்து மன்னனுக்குப் பரிமாறினான். அது, அசைவ உணவு என்பதை அறியாத மன்னனும் ‘அடடாஞ் பிரமாதம்!’ என்றபடி ரசித்து, ருசித்து, இன்னும் கேட்டுச் சாப்பிட்டான்.


இதைக் கண்ட சமையற்காரன் மகிழ்ந்தான். அரசரையே ஏமாற்ற வைக்கும் தன் திறமையை எண்ணி வியந்தான். இதே போல் தினமும் அசைவ உணவு தயாரித்து மன்னனுக்குப் பரிமாறினான். சமையலில் அவனது கைப்பக்குவத்தைப்பாராட்டிய மன்னன், ஏராளமான பரிசு வழங்கி கௌரவித்தான்!”

கதையைக் கூறி முடித்த கிருஷ்ணர், “சக்ரவர்த்தியே, எங்களது சந்தேகம் இதுதான்! மன்னனை ஏமாற்றி, புலால் உணவு சாப்பிடச் செய்த சமையற்காரன் குற்றவாளியா? அல்லது அசைவம் என்று அறியாமல் புலால் உணவு சாப்பிட்ட மன்னன் குற்றவாளியா? இருவரில் தண்டனைக்குரியவர் யார்?” என்று கேட்டார். திருதராஷ்டிரர் பதில் கூறினார்:

“கண்ணா, சர்வ வியாபியான உனக்குத் தெரியாத நீதியா? குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்கு பரிபூரணமான நீதிநெறிகளை (கீதையை) உபதேசித்த நீ, என்னிடம் விளக்கம் கேட்கிறாயே சரி, எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்! சமையற்காரன் செய்தது பெரிய குற்றமல்ல. வேலைக்காரர்கள், நேர்மையாகவோ அல்லது ஏமாற்றியோ தங்கள் எஜமானனை திருப்தியடையச் செய்து, பரிசுகள் பெறுவது உலக இயல்பு.

ஆகவே, அவன் செய்தது சிறிய குற்றமே. ஆனால், மன்னனின் நிலை அப்படியல்ல. அவன், தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களை மிக நுட்பமாக கிரகிக்க வேண்டும். தன் பணியாளர்

e-magazine
aanmeegamalar.com



களது செயல்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். தவறினால், எதிரிகளது சூழ்ச்சியால் நாட்டையும் ஏன், தன் உயிரையே கூட இழக்க நேரிடும்.

கிருஷ்ணா! கதையில் நீ குறிப்பிட்ட மன்னன் தனது கடமையைச் சரியாகச் செய்யவில்லை. ஆக, அவன் கடமை தவறியது முதல் குற்றம்.

சமையற்காரன் ஒருவனிடம் ஏமாந்தது இரண்டாவது குற்றம். புலால் உண்டது மூன்றாவது குற்றம். இவற்றை அவன் அறிந்து செய்யவில்லை என்றாலும் அவனே குற்றவாளி.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

மேலும், பறவையின் கொலையில் மன்னனுக்கு மறைமுகத் தொடர்பு உள்ளதால், அவனே அதிக குற்றங்களைச் செய்தவன் ஆகிறான். எனவே, மன்னனுக்கே தண்டனை வழங்க வேண்டும்" என்றார் திருதராஷ்டிரர்.

இதைக் கேட்டுப் புன்னகைத்த கிருஷ்ணர், "சக்ரவர்த்தி! தங்களிடம் நான் சொன்னது கதையல்ல; உண்மைச் சம்பவம். இந்தக் கதையின் நாயகன் தாங்களே. முற்பிறவியில் செய்த தான தர்மத்தின் பலனால், இந்தப் பிறவியில் நல்ல மனைவி, நல்ல மந்திரிகள், வளமான நாடு, நிறைய சந்ததிகள் என்று சகலமும் வாய்க்கப் பெற்றீர்கள். இதேபோல், பாவத்தின் விளைவால் இப்போது, புத்திர சோகத்தில் தவிக்கிறீர்கள்.

சமையற்காரன் செய்த உயிர்க் கொலை, தாங்கள் அறியாமல் நடந் தது என்றாலும், அவன் சமைத்த புலால் உணவைச் சாப்பிட்டதால், கொலை செய்த பாவம் தங்களையும் ஒட்டிக் கொண்டது.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

'மன்னனே குற்றவாளி; அவனுக்கே தண்டனை' என்ற நியாயத்தை தாங்களே சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். பாவம்ஞ் நெருப்பைப் போன்றது! நாம் அறியாமல் தொட்டாலும் நெருப்பு நம்மைச் சுட்டு விடும்.

அதே போல் அறியாமல் பாவம் செய்தாலும், அதற்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். நீங்களும் முற்பிறவியில் செய்த பாவத்தின் பலனாகவே, இப்போது புத்திரர்களை இழந்து தண்டனையை அனுபவிக்கிறீர்கள்" என்று முடித்தார் பகவான் கிருஷ்ணர். திருதராஷ்டிரர், தருமர் மற்றும் உடன் இருந்த அனைவரும் அதிர்ச்சியால் வாயடைத்துப் போயினர்.



– எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி,
செல்: 9750333265

ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# அருள்மிகு அம்மன் ஆலயங்கள்

## பங்குனி உத்திரம் வழிபாடு சிறப்பிதழ்
















இதில் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற

வரம் தரும் அருள்மிகு அம்மன் ஆலயங்கள்

பங்குனி உத்திரம் வழிபாடு சிறப்பு



உலகின் முதல் சிவாலயம் **உத்திரகோசமங்கை திருக்கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலராக வெளிவர உள்ளது.**

ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த தகவலை பெற தொடர்பு கொள்ளவும்

**Ph:9994323622 / 9994162182** **9444228203**

# பைரவரின் எட்டு படை வீடு

e-magazine
aanmeegamalar.com

பைரவரின் எட்டு படைவீடுகளுக்கு அட்ட வீரட்டானங்கள் என்று பெயர். பைரவர் வீரதீரச் செயல்கள் புரிந்த இடங்களாக இருப்பதால் இவை இப்பெயரை பெற்றன.

1. திருக்கண்டியூர்:

இத்திருத்தலம் தஞ்சை திருவையாறுசாலையில் திருவையாற்றிற்கு மிக அருகில் அமைந்திருக் கிறது. ஆதி வில்வாரண்யம் என வழங்கப்படுகிறது.

இறைவனின் திருநாமம் பிரமசிரகண்டீஸ்வரர். பிரம்மனின் அகந்தையை அழித்து அருள் கொடுத்த இடம். இத்தலத்திற்கு வந்து பக்தி யோடு வழிபாடு செய்தால், மறுபிறவியில்லை; திருமணத்தடை நீக்கும் பரிகார ஸ்தலமாக விளங்குகிறது.

இந்தக் கோவிலின்சுற்றுப் பிரகாரத்தில் வட மேற்குத் திசையில்பைரவரின் தனிசன்னதி உள்ளது.

ஞாயிறு, செவ்வாய்க் கிழமை களில் வழிபாடு செய்வது சிறப்பு. இந்த நாட்களில் இலுப்பை யெண்ணெய், புங்கெண்ணெய், நல்லெண்ணைய் கலந்து 8 விளக்கேற்றி மூலவருக்கு அர்ச்சனை, அபிஷேக ஆராதனை செய்ய வேண்டும்.

2.திருக்கோவிலூர்:


திருக்கோவிலூர் கோவல்நகர் வீரட்டம், திருக்கோவிலூர் நகருக் குள்ளேயே தென்பெண்ணை நதி தீரத்தில் அமைந்துள்ளது.

இறைவனின் திருநாமம் அந்தகாசுர சம்ஹார மூர்த்தி. அன்னை சிவானந்தவல்லி என்ற பெரிய நாயகி.

ஆலயத்தில் ஈசானிய மூலையில் பைரவர் தனி சன்னிதியில் அருள் பாலிக்கிறார்.

ஞாயிறு,வெள்ளி,வியாழக்கிழமைகளில் வழி பாடு செய்தல் சிறப்பு.

இங்குள்ள மஹாகணபதி சன்னதியில் தான் ஸ்ரீமஹா கணபதியின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வையார் விநாயகர் அகவலை அருளினார். இத்தலத்தில் அபிஷேகம் செய்தால், நல்ல குருவின் திருவருள் முழுமையாக அமையும். சோழச் சக்கர வர்த்தியாகத் திகழ்ந்த



ராஜராஜ சோழன் பிறந்த ஊர் இது!!!

ஸ்ரீராஜராஜசோழன் ஸ்ரீ கருவூரார் சித்தரின் அருளின் படி பைரவரை வணங்கி ஈடில்லாத புகழ் பெற்றார்.

ஆன்மிகமலர்.காம்

### 3.திருவதிகை:

பண்ருட்டியிலிருந்து ஒரு கி.மீ.தூரத்தில் அமைந்துள்ள திருத்தலம். இறைவனின் திருநாமம் வீரட்டானேஸ்வரர். ஈசானிய மூலையில் இங்கு பைரவர் எழுந் தருளியுள்ளார்.

திரிபுரம் எரித்த இடம் இதுவே! வித்யுமாலி, தாரகாசுரன், கமலாக்ஷன் ஆகிய அசுரர்களை அழித்த இடம் இது. வெள்ளி, புதன் கிழமைகளில் இங்கு வழிபடுவது சிறப்பாகும்.

தீராத நோய்கள் தீர இங்கு வந்து வழிபட வேண்டும். சுந்தரமூர்த்தி நாயனார் திருவடி தீட்சை பெற்ற இடம் இது.சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு திரும்பிய திருநாவுக்கரசரின் தீராத குன்ம வியாதியை நீக்கி தடுத்தாண்ட தலம் இது.

உடல் நோய்களும்,பிறவி நோய்களும் நீங்கும் இடம் இதுவே!

### 4.திருப்பறியலூர்:

மாயவரம் திருக்கடையூர் சாலையில் 8 கி.மீ.தூரத்தில் செம்பொனார் கோவில் உள்ளது.

இந்த செம்பொனார் கோவிலில் இருந்து 2 கி.மீ.தூரத்தில் திருப்பறியலூர் இருக் கிறது.சுவாமியின் திருநாமம் வீரட்டேஸ்வரர். அம் பாளின் பெயர் இளங்கொம்பனையாள். அகந்தை கொண்ட தட்சனை அழித்த இடம் னிஇது.தட்சன் யாகம் செய்த இடமே தற்சமயம் கோவிலின் குளமாக இருக்கிறது.

இங்கு வந்து வழிபட்டால், தீராத கடன்கள் தீரும்; பூர்வ ஜென்மங்களில் ஏற்பட்ட சாபங்கள், தோஷங்கள் ஆகியவற்றை நீக்கி,நல்வாழ்வு தருமிடம் இதுவே!!!

ஆன்மிகமலர்.காம்

### 5.திருவிற்குடி:

திருவாரூர் நாகூர் சாலையில் திருப்பயந்தங்குடி யிலிருந்து பிரிந்து 2கி.மீ.தூரம் சென்றால் திருவிற்குடியை அடையலாம்.

மேற்கு நோக்கிய திருக்கோவிலாக இது அமைந்திருக்கிறது. இந்தக் கோவிலின் இறைவனின் திருநாமம் ஸ்ரீஜலந்தராசுரவத மூர்த்தி.திருமால் சுதர்ஸன சக்கரம் வேண்டி இறைவனுக்கு துளசியால் அர்ச்சித்து அருளையும், சுதர்ஸன சக்கரத்தையும் பெற்றார்.

எனவே, இங்கு சிவபெருமான் வடிவில்



இருக்கும் பைரவருக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படுகிறது.

இங்கு திருமால் தனது தேவியான லட்சுமியோடு இருக்கிறார்.

பெரும் வறுமை நீங்கிட அல்லது மகத்தான செல்வ வளம் வேண்டுவோர், இங்கு 16 வெள்ளிக்கிழமைகளுக்கு வர வேண்டும் வந்து விநாயகர், சுவாமி, அம்பாள், இலக்குமி, பைரவர் ஆகியோருக்கு அபிஷேகம் ஆராதனைகள் செய்ய வேண்டும்;

இதைச் செய்ய இயலாத அளவுக்கு பொருளாதாரத்தில் சாதாரண நிலையில் இருப்போர் அர்ச்சனை செய்தால் போதும். இவ்வாறு செய்து முடித்தால், வறுமை நீங்கும்; செல்வ வளம் பெருகும்.

### 6.வழுவூர்:

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் சாலையில் 8 கி.மீ.தூரம் சென்றதும், வலப்புறம் திரும்ப வேண்டும். அங்கிருந்து அரை கி.மீ.தூரத்தில் இருப்பது வழுவூர் ஆகும்.

இறைவன் கிருத்திவாஸர் என்ற திருநாமத்தோடு அருள்பாலித்து வருகிறார்.

அகங்காரத்துடன் தான் என்ற அகந்தையில் இருந்த முனிவர்களின் ஆணவத்தை அழித்து,திருக்காட்சி கொடுத்து அவர்களுக்கு

e-magazine
aanmeegamalar.com

ஞானச் செல்வம் தந்தருளும் இடம் இது.

ஸ்ரீஐயப்பன் அவதரித்த இடமும் இதுவே!!! எத்தனையோ பேர்கள் தியானம் செய்கிறேன்; தவம் செய்கிறேன் எனக்கு எந்த முன்னேற்றமும் இல்லை என புலம்புபவர்கள், இங்கு வருகைதந்து, இறைவனை வழிபட வேண்டும். மாதம் ஒரு நாள் வீதம் பத்து நாட்களுக்கு இங்கிருக்கும் மூலவரின் முன்பாக அமர்ந்து தியானம் செய்ய வேண்டும்;

இங்கும் ஈசான மூலையில் பைரவர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு அருகிலேயே சனீஸ்வரர் அமர்ந்திருக்கிறார்.

ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனி, அர்த்த அஷ்டமச்சனி (4 ஆம் இடத்துச்சனி),சனி திசையால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் 8 சனிக்கிழமைகளுக்கு இங்கு வர வேண்டும்;

அவ்வாறு வந்து, இவரது சன்னிதியில் 8 தீபம் நல்லெண்ணெய் ஊற்றி, ஏற்றவேண்டும். அதன்பிறகு அபிஷேகம் ஆராதனை செய்ய வேண்டும்; முடியாதவர்கள் அர்ச்சனை செய்து வர சனிக்கிரகத்தின் பாதிப்புகள், தொல்லை கள் நீங்கி, எல்லையில்லாத மனநிம்மதியைப் பெறலாம்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

### 7.திருக்குறுக்கை:

மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு சாலையில் கொண்டல் என்ற இடம் வந்ததும்,பிரிந்து செல்ல வேண்டும். அங்கிருந்து 3 கி.மீ.சென்றால் திருக்குறுக்கை வரும். இறைவனின் திருநாமம் வீரட்டேஸ்வரர். இறைவியின் திருநாமம் ஞானாம்பிகை ஆகும். காமனை எரித்த இடம் இதுவே!!!

தியானம் செய்பவர்கள், இறை நெறி செல்பவர்கள் இங்கு வந்து வழிபட்டால் சுழுமுனை கூடி, வாக்கு சித்தியும் தவ உயர்வும் பெறமுடியும்.

குழந்தை இல்லாதவர்கள் இங்கு வந்து 8 வியாழன் அல்லது 8 செவ்வாய்க்கிழமை அல்லது மாதாந்திர வியாழன் அல்லது மாதந்திர செவ்வாய்க்கிழமை என்று 8 முறை வழிபட்டு, அன்னதானம் ஒவ்வொரு தடவையும் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் கண்டிப்பாக மழலைச் செல்வம் பெறுவார்கள்.

### 8.திருக்கடவூர்:

திருக்கடையூர் என்ற திருக்கடவூர் ஆதியில் வில்வாரண்யம் என்ற பெயரில் விளங்கியது.

அமிர்தகடேஸ்வரர், அபிராமி என்ற பெயர்களில் அப்பாவும் அம்மாவும் அருள்பாலித்து வரு கின்றனர். எமனை சம்ஹாரம் செய்து மார்க்கண்டேயரைக் காத்தருளிய இடம் இதுவே!!! இதய நோயில் வருந்துவோர்கள், ஆயுளுக்கு கண்டமுள்ளவர்கள் இங்கு வந்து வில்வத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

அதன்பிறகு தியானம் செய்ய வேண்டும். இவ்வாறு 8 சனிக் கிழமைகளுக்குச் செய்து வந்தால், மரண பயம் அகன்று நீடூழி வாழலாம்.

– சௌமியா சுப்ரமணியன்
18, பத்மநாபன் தெரு, பழைய பல்லாவரம்
சென்னை 600117





# பாபா பைத்யநாத் ஜோதி லிங்கம்

இந்தியாவின் ஜார்கண்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள தியோகர் என்ற புனித நகரமானது, பாபா பைத்யநாத் தாம் என்ற மதிப்பிற்குரிய ஆன்மீக வளாகத்தைக் கொண்டுள்ளது. சிவபெருமானின் பிரகாச வடிவத்தை குறிக்கும் 12 ஜோதி லிங்கங்களில் இதுவும் ஒன்று என்பதால், இந்த புனித தலம் இந்துக்களுக்கு மகத்தான முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. கூடுதலாக, இது சதி தேவியின் தெய்வீக சக்தியுடன் தொடர்புடைய 51 சக்தி பீடங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. சிவன் மற்றும் சக்தியின் இந்த தனித்துவமான சங்கமம் பாபா பைத்யநாத் தாமை இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புனித யாத்திரை இடமாக கருதப்படுகிறது.



டெல்லி
தியாகராஜன்

சக்திபீடங்களில் ஒன்றான மா பார்வதி கோயில் (சக்தி தேவியின் துண்டிக்கப்பட்ட உடல் பாகங்கள் விழுந்த பக்தி ஸ்தலங்கள்), பிரதான கோயிலுடன் பெரிய சிவப்பு புனித நூல்களால் கட்டப்பட்டுள்ளது, இது தனித்துவமானது.

12 ஜோதி லிங்கங்களில், பாபா பைத்யநாத் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளார். இங்குள்ள ஜோதிர்லிங்கம் சுயம்புவாகவும், பழங்காலத்திலிருந்தே வழிபடப்பட்டு வருவதாகவும் நம்பப் படுகிறது.

கோயில் வளாகத்தில் புனித ஜோதி லிங்கம் உள்ளது, இது மங்கலான கருவறையில் உள்ளது. ஆன்மிக ஞானம் வேண்டி, தொலைதூரத்தில் இருந்தும் பக்தர்கள் வந்து பிரார்த்தனை செய் கின்றனர். ஜோதி லிங்கத்திற்கு குணப்படுத்தும் சக்திகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாபா பைத்யநாத் தாமில் உள்ள சக்தி பீடம் சிவபெருமானின் மனைவியான சதியின் புராணத்துடன் தொடர்புடையது. அவள் தீக் குளித்தவுடன், சிவன் தன் துக்கத்தில் அவளது உடலை நிலம் முழுவதும் சுமந்து சென்றார்.







e-magazine
aanmeegamalar.com

அவளது உடல் உறுப்புகள் விழுந்த ஒவ்வொரு இடத்திலும் ஒரு சக்தி பீடம் தோன்றியது. தியோகரில், சதியின் இதயம் விழுந்து, அது ஹிருதய பீடமாக அல்லது இதய ஆலயமாக மாறியதாக நம்பப்படுகிறது. இங்குள்ள சக்தி பீடம் பார்வதி தேவியின் வெளிப்பாடான ஜெய துர்காவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

பாபா பைத்யநாத் தாமுக்கு யாத்திரை ஒரு மாற்றமான அனுபவமாக கருதப்படுகிறது. பக்தர்கள் புனிதப் பயணத்தை மேற்கொள்கிறார்கள், அருகிலுள்ள நகரமான ஜசிதிஹ்விலிருந்து வெறுங்காலுடன் நடந்து, கங்கையில் இருந்து புனித நீரால் நிரப்பப்பட்ட ஒரு காவடியில் அலங்கரிக்கப்பட்ட பானையைச் சுமந்து செல்கிறார்கள். இந்த அடையாளச் செயல் சிவ பெருமானால் சதியின் எச்சங்களை எடுத்துச் செல்வதைக் குறிக்கிறது.

ஷ்ரவண மாதத்தில் நடைபெறும் மேளா, பாபா பைத்யநாத் தாமில் நடைபெறும் மிக முக்கியமான திருவிழாவாகும். லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் கோவிலில் குவிந்து, துடிப்பான மற்றும் ஆன்மீக சூழலை உருவாக்குகிறார்கள். காவடி யாத்திரை, இந்த நேரத்தில் அதன் உச்சத்தை அடைகிறது, இந்த நகரத்தை பக்தி கடலாக மாற்றுகிறது.

மற்ற கோவில்களை விட இங்கு நடக்கும் பூஜை வித்தியாசமானது. இரண்டு கோவில்களின் உச்சியிலும் சிவப்பு நிற நாடாவைக் கட்டுகிறார்கள்.

விசேஷ நாள்: மகா சிவராத்திரி, ஷ்ரவண மேளா அருகில் உள்ள தலம்: நௌலகா கோயில் தியோகர் 2.5 கி.மீ. கோவில் நேரம்: காலை: 7.00 12.00 மணி மதியம்: 2.00 7.30 மணி. தொடர்புக்கு: 06512331828

–டெல்லி தியாகராஜன்
9868423215

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்**மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**186**க்கும் மேற்பட்ட இதழ்களை





## aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# கடன் தீர்க்கும் கயிலைநாதர்





வினைக்கேற்ப ஒரு மனிதன் பிறவி எடுத்தாலும், இன்றைய சூழலில் வாழ்வது பெரும் சவாலாகவே உள்ளது. தற்போதைய பொருளாதார நிலையின் காரணமாக பலர் பல நேரங்களிலும், பலரிடத்திலும் கடன்பட நேரிடுகின்றது. அப்படி கடன்பட்ட மனிதர்கள், கம்பர் வாக்குப்படி 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கலக்கத்துடனே காலம் கழிக்கிறார்கள். இவர்களின் கலக்கம் தீர்க்கும் தலமாகத் திகழ்கிறது பெரணம்பாக்கம் ஸ்ரீருணஹரேஸ்வரர் ஆலயம்.

வாழைப்பந்தலில் அன்னை பராசக்தியின் கட்டளைக்கிணங்கிய கந்தன், ஜவ்வாது மலையை நோக்கி தனது சக்திவேலை வீசினார். அவ்வேலானது அங்கு தவம் செய்துகொண்டிருந்த போதன், போதவான், புத்திராண்டன், புருகூதன், பாண்டுரங்கன், வாமன் மற்றும் சோமன் ஆகிய ஏழு அந்தணர்களின் தலைகளையும் கொய்தது. இதனால் கொடும் பாபமும், பிரம்மஹத்தி தோஷமும் கந்தனை சூழ்ந்தது.

கலங்கினான் கார்த்திகேயன். இந்த கொடும் பாவத்தில் இருந்து விடுபட, தான் உண்டாக்கிய சேயாற்றின் வடகரையில் ஏழு சிவாலயங்களையும், தென்கரையில் ஏழு சிவாலயங்களையும் ஸ்தாபித்து ஈசனை பூஜித்தார். பின்னர் சரக்கொன்றை மரங்களும், வில்வ மரங்களும் சூழ்ந்த இந்த



பதிக்கு வருகை தருகின்றார்.

ஈசனை எண்ணி தான் தெரியாமல் செய்த பாவத்திற்காக மனம் கலங்குகிறார். அதோடு, இவ்வில்வ வனத்தினில் ஓர் சிவலிங்கம் ஸ்தாபித்து, ஈசனை மனம் குளிர அர்ச்சிக்கின்றார், அக்னி கர்ப்பர். உடன் தனது சங்கடத்தை தீர்க்குமாறு, அண்ணன் ஆனைமுகனையும் வழங்குகின்றார், வடிவேலர். இதனால் இத்தலத்தின் கணபதி சங்கடஹர கணபதி என்றே போற்றப்படுகின்றார். அகத்தியருக்கும், மிருகண்டு மகரிஷிக்கும் இறைவன் உமையுடன் கூடிய தரிசனத்தை இங்கு காட்டியருளியுள்ளார்.

முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வூர் சதுர்வேதிமங்கலம் என்றும், சதுர்வேதி பாக்கம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. அனு தினமும் வேதகோஷம் ஒலிக்கும் வண்ணம் இங்கு பிராமணர்களை குடிவைத்தான் குலோத்துங்கச் சோழன். அவர்களுக்கு உண்டான வசதிகளையும் செய்து கொடுத்தான். சதுர்வேதிபாக்கம் என்பது நாளடைவில் பிராமணபாக்கம என்று அழைக் கப்பட்டுள்ளது. அதுவே மருவி தற்போது பெரணம்பாக்கம் என்று வழங்கப்படுகிறது.

பல்லவர் காலத்தில் இவ்வாலயம் விரிவுபடுத்தப் பட்டு, இரண்டு முறை கும்பாபிஷேகம் நடத்தப் பட்டுள்ளது. விஜயநகரப் பேரரசனான கந்ததேவ மகாராஜா தனது ஆட்சிக்காலத்தில் தேவதான கிராமங்கள் எனப் பட்டியலிட்டு, அதில் இந்த பிராமணபாக்கத்தையும் இணைத்து, இங்குள்ள ருணஹரேஸ்வரர் ஆலயத்தில் விளக்கு எரியவும், நித்திய பூஜைகள் முறையாக நடந்திடவும் நிலங்களை வழங்கியுள்ளார். சம்புவராயர்கள் ஆட்சிக்காலத்தில் இக்கோவிலின் நிர்வாக பணி களுக்காகவும், தினசரி பூஜைக்காகவும் 50 வேலி புஞ்சை நிலங்களை தானமாக வழங்கியுள்ளனர்.


இங்கு இரண்டு தீர்த்தங்கள். 1. ருணஹர தீர்த்தம், 2. பிரம்மதீர்த்தம்.

இரண்டு தல விருட்சங்கள் 1. வில்வம், 2. சரக்கொன்றை.

இரு வினைகளை களையக்கூடிய தலம். 1. முன்வினை கடன், 2. இப்பிறவியில் ஏற்பட்ட கடன்.

ஊரின் மத்தியில் ஆலயம் கிழக்கு பார்த்தபடி அழகுற அமைந்துள்ளது. இராஜகோபுரம் காணப்படவில்லை. நேராக முன் மண்டபம் காணப்படுகிறது. இங்கே நந்தியம்பெருமான் விற்றுள்ளார். சந்நிதிக்கு வெளியே இருபுறமும் கணபதி மற்றும் கந்தன் குடிகண்டருளுகின்றனர். சில படிகள் மேலே ஏறிட... அர்த்த மண்டபம் மற்றும் கருவறை உள்ளன.

கருவறையில் சொரசொரப்பான பானலிங்கம்





வட்டமான ஆவுடையாருடன் அற்புதமாக அருள் பாலிக்கின்றார், ஸ்ரீருணஹரேஸ்வரர். சகலவித பாபங்களையும் போக்குவதால் இப் பெருமான், பாப ருணஹரேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்றார். முருகப்பெருமானால் நிறுவப்பட்ட லிங்கம் என்ப தால் இத்தலத்தின் பழமை பளிச்சென தெரிகிறது.

வணங்கி, வெளியே வருகையில் முன் மண்டபத்தின் வடக்கே தென்முகம் பார்த்த வண்ணம் அன்னை ஸ்ரீ மங்களாம்பிகை சர்வ மங்களங்களையும் அளிப்பவளாக அபயமளிக்கின் றாள்.

ஆலய வலம் வருகையில் கோஷ்ட தெய்வங் களை கண்டு வணங்குகின்றோம். சிறிய ஆலயம் எனினும், சுத்தமாக உள்ளது. ஊர் பொதுமக்க ளால் நிர்வகிக்கப்படும் இக்கோவிலில் தினமும் ஒருவேளை பூஜை நடத்தப்படுகின்றது.

அனைத்து சிவாலய விசேஷங் களும் சிறப்புற நடைபெறுகின்றது. ஊரார் உதவியுடன் பகல் வேளையில் எப்போது வேண்டுமானாலும் ஆலய தரிசனம் செய்யலாம்.

தீராத கடன் பிரச்சனையால் அவதிப்படுபவர்கள் முருகனுக்கு உகந்த செவ்வாய்க்கிழமையில், இங்கு சிவன் பார்வதிக்கு தேன் மற்றும் அரிசி மாவினால் அபிஷேகம் செய்து, சிவப்பு நிற ஆடைகளை அணிவித்து, செவ்வரளி மாலை சாற்றி, வேண்டிச் செல்கின்றனர்.கடன்கள் முழுதும் அடைந்த பின் இங்கு வந்து மனதில் வேண்டியதை நிறைவேற்றிச் செல்கின்றனர்.

கடுமையான நோய் மற்றும் இதர துன்பங் களிலிருந்து விடுபட, இங்கு சுவாமி அம்பா ளுக்கு பசும்பாலால் அபிஷேகம் செய்து வணங்கு கிறார்கள் பக்தர்கள்.

முன்வினையால் ஏற்படும் கடன், தாய் தந்தை யருக்கு செய்ய வேண்டிய கடன் மற்றும் பித்ரு கடன் ஆகிய மூவகை கடன்களால் ஏற்படும்குறை களை நிவர்த்தி செய்யும் தலமாக திகழ்கிறது இப்பதி.



மோ.கணேஷ்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில், போளூர் தேவிகாபுரம் சாலையில் உள்ள மட்டப்பிறையூரில் இருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பெரணம்பாக்கம்.

ஆலய டிரஸ்டி: விஸ்வநாத சர்மா, சென்னை. தொடர்புக்கு: 8754405387.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

e-magazine
aanmeegamalar.com




# Aanmeega Malar

## English magazine

Read on to find out amazing spiritual information

**covering all spiritual information**

For more details
9444228203
(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

# நொய்டா முருகன் கோவிலில் ‘தை’ பூச விழா




‘தை பூசம்’ விழா, நொய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், கலச பூஜையுடன் துவங்கியது. தொடர்ந்து ‘பக்தர்கள்’ கோவில் வளாகத்திற்குள் ‘காவடி மற்றும் பால் குடத்துடன் ஊர்வலம் சென்றனர். விழாவின் சிறப்பு அம்சமாக, ஸ்ரீ கார்த்திகேயனுக்கு எண்ணெய், திரவியம், மற்றும், பால், தயிர், தேன், இளநீர், பழச்சாறு, விபூதி, சந்தனம், கலச அபிஷேகம், ஆகியவற்றால் சிறப்பு அபிஷேகம்



எஸ்.வெங்கடேசன்

முடிந்தவுடன் வெள்ளி கவசத்தால் அலங்கரிக்கப்பட்டது.

பக்தர்கள், பல்வேறு ஸ்லோகங்கள் பாடி, ஸ்ரீ கார்த்திகேயரைப் போற்றி, பக்திப் பாடல்களைப் பாடி, ‘முருகனுக்கு ஹரோ ஹரா’ என்று கோஷமிட்டனர். மேலும், அங்கிருந்த அனைவரும் ‘முருக கோஷம்’ படித்தனர். அனைத்து பூஜைகளும் கோயில் வாத்தியார்கள்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா அவர்கள், தென்னிந்தியா முழுவதும் மற்றும்

e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



இந்தியாவின் பிற பகுதிகளிலும் உள்ள முருகன் கோவில்களில் நடைபெறும் அதே வரிசையில், நடத்தி வைத்தார். அன்றைய தினம் மகா தீபாராதனையுடன் நிறைவுற்று, அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது.

கடுமையான குளிர் காலத்தை தொந்தரவு செய்யாமல், நொய்டாவின் பல்வேறு பகுதி களிலிருந்தும், டெல்லியின் அண்டைப் பகுதி களிலிருந்தும் மற்றும் பிற இடங்களில் இருந்தும் பக்தர்கள் திரளாக வந்து ஸ்ரீ கார்த்திகேயரின் அருள் பெற்றனர். கோவில் நிர்வாகத்தினர், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலி மற்றும் உறுப் பினர்கள்: ஏ பாலாஜி, ராமசேஷன், ராஜு ஐயர், ராஜேந்திரன், வெங்கட்ராமன், ராதாகிருஷ்ணன், மற்றும் பழனிவேல், அவர்களுக்கு சிறப்பாக இவ்விழாவை நடத்தி கொடுத்ததற்க்கு நன்றி தெரிவித்தனர்.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370



# சரீரத்தில் பற்று வைத்துக் கொண்டிருப்பவன் அன்பை, பண்பை, பக்தியை உணரமாட்டான்

சீடன்: நம் வளர்ச்சி எப்பொழுது தெரியும்?

ஞானி: காலத்தின் பெருமை தெரிந்தால் தான் வளர்ச்சியில் பெரு மை தெரியும்.

சீடன்: கடவுளின் ருசி மனிதனுக்கு எப்பொழுது புரியும்?

ஞானி: இறைவன் எல்லோரையும் ஒரே மாதிரி தான் பார்க்கிறான் என்பதை உணரும்போது.

சீடன்: கடவுள் பொதுவானவன் என்ற உணர்வு மட்டும் போதுமா?

ஞானி: போதாது. சொந்தமானவன் என்ற உணர்வு வேண்டும். அப்படிப்பட்ட உணர்வு வருவதற்கு தான் பிரதோஷ பூஜை முதலியவை ஏற்பட்டது.

சீடன்: பக்தன் இந்த பூஜைகளில் என்ன எண்ணுகிறான்?

ஞானி: ஆண்டவனை, கடவுளை இந்த பூஜைகளில் பார்க்கிறான். இல்லா விட்டால் கடவுளைப் பார்த்திருக்கும் குருநாதனை இந்த பூஜையில் பார்க்கிறான்.

சீடன்: மனிதனுக்கும், கடவுளுக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: மறைந்து போன மனிதனை மீண்டும் காண முடியாது. மறைந்திருக்கும் கடவுளை பக்தியினால் காணலாம்.

சீடன்: மனிதனுக்கும், பக்தனுக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: பக்தனுக்கு கடன் வந்ததும் கடவுள் வந்து அருளியது போல் நமக்கும் வருவான் என்று எண்ணுபவன் மனிதன். கடன் வருவதுதான் மிஞ்சும்.

சீடன்: மனிதனுக்கும், ஞானிக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: மனிதன் உயிருடன் இருக்கிறான். ஞானி வாழுகிறார். ஞானிகளின் வாழ்க்கை என்பது ஒரு எடுத்துக்காட்டு.

சீடன்: கடவுள், பக்தன், ஞானி என்ன பொது பொருத்தம்?

ஞானி: எல்லா உயிர்களையும் கடவுளாகக் கொண்டு குளிர்ந்த முகத்துடன் வரவேற்பார்கள்.

சீடன்: மும்மூர்த்திகளுக்கும், உலகிற்கும் என்ன சம்மந்தம்?

ஞானி: எலக்ட்ரான், ப்ரோடான், ந்யூட்ரான் என்பது எப்படி ஒவ்வொரு அணுவுக்கும் முக்கியமோ அது போலவே மும்மூர்த்திகளும்.

சீடன்: மனித வாழ்க்கைக்கும், வெளியுலக இயற்கைக்கும் சம்பந் தம் உண்டா?

ஞானி: உண்டு. இறைவன் படைத்த பிராணவாயுவினால் உயிர் வாழும் நீ என்றைக்காவது அதற்காக அவனை நினைத்த துண்டா? நன்றி செலுத்திய துண்டா?

சீடன்: உலகத்தில் மனிதனுக்கு மனிதன் என்ன சம்பந்தம்?

ஞானி: சர்வம் பிரும்ம மயம் என்பதால் அனைவரும் ஒன்றே. கண்ணுக்கு அஞ்ஞானத்தால் வித்தியாசமாக தெரிவதே ஜாதி, மத, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வர்ணங்கள்.

சீடன்: வைகுண்டம் என்று ஒன்று உண்டா?

ஞானி: வைகுண்டம் என்பதே என் சொந்த கிராமம். சொந்த கிராமத் தை விரும்பாதவன் உண்டா என்கிறார்கள் பக்தர்கள்.



சீடன்: பக்தி ஏன் எங்களுக்கு வருவதில்லை?

ஞானி: தேகாபிமானம் என்பதே பற்று. சரீரத்தில் பற்று வைத்துக் கொண்டிருப்பவன் அன்பை, பண்பை, பக்தியை உணரமாட்டான். அதனால் விளங்க முடிவதில்லை.

சீடன்: இறைவன் மனிதனிடம் என்ன எதிர்பார்க்கிறான்?

ஞானி: மனிதன் உலகில் வாழும்போதே முழுமை அடைந்தால்முக்தி எனப்பெயர். வாழும்போதே உன் உயிரை என்னிடம் தா என்கிறான் கடவுள்.

சீடன்: மனம் இதற்கு ஒத்துழைக்க மறுக்கிறதே?

ஞானி: மனதை அடித்தால் தான் கடவுளும், நாமும் ஒன்று என்ற நிலை ஏற்படும். மனதை அடிக்காதவர்கள் வெளி உலகில் அடிபடுவார்கள்.

சீடன்: உலகில் கடவுள் எப்படி செயல்படுகிறான்?

ஞானி: கடவுள் உலகத்தில் புகுந்தால் கதைகள், புராணங்கள் உண்டாகும். மனிதனுள் புகுந்தால் மனிதனுக்கு ஞானம் பிறக்கும். பொருட்களில் புகுந்தால் சித்தர்கள் மத்தியில் சித்து விளையும்.

சீடன்: இதில் எனக்கு எப்பொழுது முழு நம்பிக்கை பிறக்கும்?

ஞானி: இறைவனின் கருணை பிறந்தால் தான் நம்பிக்கை முழுமை அடையும்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

சீடன்: இதன் விளைவு என்ன?

ஞானி: பகவானை எண்ணி இருக்கும்போது உள்ளத்தில் ஞானவேள்வி நடக்கிறது. அப்பொழுது தீமைகள் அகன்று நன்மைகள் உற்பத்தியாகி கடவுள் பிரசன்னமாகிறான்.

சீடன்: இந்த எண்ணங்களெல்லாம் சாஸ்திரங்களில் உள்ளதா?

ஞானி: இருக்கும். ஆனால் எழுதின வண்ணம் படிக்கவில்லை என்றால் நியாயமாக படிக்கவில்லை, புரிந்து கொள்ளவில்லை என்று பொருள்.

சீடன்: பல கடவுள் இருப்பதால் குழப்பத்தை உண்டு பண்ணாதா?

ஞானி: தெய்வ பேதங்கள் இல்லாமல் இருந்தால்தான் கடவுளைப் பற்றி சமசித்தம் இருக்கும். இதற்கு சமயத்தைப் பற்றிய உண்மையான ஞானம் குருமுகமாக கிட்டவேண்டும். அவர்களே அப்பியாசத்தில் நுழைகின்றனர். அனுபவ சித்தாந்தம் தான் பக்தி, ஞானம், கடவுள் எல்லாம்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

சீடன்: நவராத்திரி என்பது அவ்வளவு முக்கியமா?

ஞானி: ஆமாம். நவரசம் என்பது மனித வாழ்க்கையில் எப்படி முக்கியமாக உள்ளதோ, அது போல் நவராத்திரி தெய்வீக வாழ்க்கைக்கு முக்கியம்.

சீடன்: இது சம்பிரதாயமல்லவா?

ஞானி: பகவத் சம்பிரதாயத்தை பின்பற்றினால் மன ஆரோக்கியம் ஏற்படும். மனம் ஆரோக்கியப்பட்டால் தான் சிவபெருமான் மாற்றுப் பாதையை தருகிறான்.

சீடன்: நவராத்திரி விரதம் என்று எதையாவது பிடித்துக் கொள்ள வேண்டுமா?

ஞானி: எதையாவது விட்டால் தான் விரதம். ஞானம் என்ற பேரறிவை விட, சந்தேகத்தை விடு.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
•••
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# பெங்களூரில் ஸ்ரீ ராதா கிருஷ்ணா மந்திர்


கர்நாடக மாநிலத்தின் தலைநகரமான பெங்களூரில், ராஜாஜி நகரில், ஹரே கிருஷ்ணா எனும் ஒரு சிறிய குன்றின் மேல் அமைந்துள்ளது ஸ்ரீ ராதா கிருஷ்ணா மந்திர். உலக புகழ் பெற்ற இஸ்கான் (International Society of Krishna Conciousness) அமைப்பின் ஸ்தாபகரான ஸ்ரீலா பிரபுபாதா அவர்களின் பரிபூரண ஆசியுடன் உருவான இத்திருக்கோவில், அனைவரும் சென்று தரிசிக்க வேண்டிய மிக முக்கியமான ஸ்தலமாகும்.

ஆன்மிகமலர்

இத்திருக்கோவில் கட்டுவதற்கான ஏழு ஏக்கர் நிலமானது 1988–ம் வருடம் பெறப்பட்டு, இந்த குன்றின் மேல், சிறிய கூடாரத்தில், ஸ்ரீ கிருஷ்ண பலராம மூர்த்தங்கள் முதலில் வைத்து பூஜிக்கப்பட்டதாம். இஸ்கான் பெங்களூரு அமைப்பின் தலைவரான ஸ்ரீ மது பண்டிட் தாசா அவர்களால் வடிவு அமைக்கப் பட்டு, கட்டிட பொறியாளர் ஸ்ரீ ஜகத் சந்திர தாசா அவர்களுடன் இணைந்து, சுமார் 32 கோடி ரூபாய் பொருட்செலவில், மூன்று தளங்களுடன், கண்ணாடி கோபுரத்துடன், அழகிய இத்திருக்கோவில் 1990 ம் வருடம் உருவாக்கப்பட்டதாம். 32 ஆயிரம் கியூபிக் கற்களும், 131250 டன் சிமெண்டும், 1900 டன் இரும்பும் கொண்டு, 600 கட்டிட வல்லுனர்களின் உதவியுடன் இத்திருக்கோவிலை அழகுடன் செதுக்கியுள்ளார்கள். மாண்புமிகு ஜனாதிபதி

ஸ்ரீ சங்கர் தயாள் சர்மா அவர்களால் 31.7.97 ம் வருடம் மக்களின் தரிசனத்திற்கு இக்கோவில் திறக்கப்பட்டது.

கோவிலுக்கு செல்ல ராம்ப் வசதி உள்ளது மலையின் மேல் அமைந்துள்ள கோவிலின் வெவ்வேறு கோணங்களை ரசித்தபடி, கண்ணாடியுடன் மின்னும் ராஜ கோபுரத்தை வணங்கி, நெடிதுயர்ந்த தங்க தகடு வேய்ந்த 56 அடி துவஜஸ்தம்பத்தை வணங்கி, ராம நாம



e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



படிக்கட்டுக்கள் மூலம் முதல் தளத்தை அடைகிறோம். வரிசையில் நிற்கும் போது பக்தர்கள் மனம் ஒன்றி, பகவான் நாமத்தை வாயார கூற ஏதுவாக 108 சதுரமான கல்பலகைகள் உள்ளன. பக்தர்கள் சிரத்தையுடன், ஒவ்வொரு பலகை மீதும் நின்று, “ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே”, “ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே” என கூறியபடியே செல்கிறார்கள். இன்றைய இளைய தலைமுறையினரும் பக்தியுடன் பகவன் நாமம் சொல்வது மனதிற்கு இதமாக இருக்கிறது.

முதல் தளத்தில், பெரிய திருவடியாம் கருடர், சிறிய திருவடியாம் அனுமரை வணங்கிய பின், சர்வ அலங்காரத்தில்,”ஸ்ரீ பிரகலாத நரசிம்மரின்” திவ்ய தரிசனம். வண்ண பட்டு ஆடையில், தங்க வைர நகைகள் ஜொலிக்க அருளும் ஸ்ரீ நரசிம்மரை வணங்கி, படிகள் மூலம் இரண்டாவது தளத்தை அடைகிறோம். இங்கு அருள் ஆட்சி நடத்துபவர் “ஸ்ரீனிவாச கோவிந்தா.” வண்ண பட்டு ஆடை, மலர் அலங்காரத்தில் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகராம் ஸ்ரீனிவாசரை பக்தர்களின் கோவிந்த நாம ஒலியில் கண்ணும், மனமும் மகிழ தரிசிக்கிறோம். படிகள் மூலம், கோவிலின் அழகை ரசித்தப்படியே, வரிசையான மூன்று கோபுரம் மற்றும் ராஜ கோபுரத்தையும் தரிசித்தபடியே மூன்றாவது தளத்தை அடைகிறோம். மிகப்பெரிய விசாலமான பெரிய மண்டபத்தில் தங்க தகடு வேய்ந்த மூன்று கோபுரங்களில், நடுவில் “ஸ்ரீ ராதா கிருஷ்ண சந்திரா” திவ்ய தரிசனம் அளிக்கிறார். ஒரு பக்கம், ஸ்ரீ கிருஷ்ண பலராமர் நாட்டியமாடும் மூர்த்தங்களும், மறுபக்கம் “நித்யா கவ்ரங்கா” (சைத்யன்ய மகா பிரபு, நித்யானந்தரும்) அருள்கிறார்கள். உயிரோட்டமுள்ள ஸ்ரீலா பிரபுபாதரை வணங்கி, தியான மண்டபத்தில் அமர்கிறோம். கண்ணை கவரும் அலங்காரத்திலும், அழகிலும் மெய் மறக்கிறது. மனதிற்கு நிம்மதியும் அமைதியும் கிடைக்கிறது.

புனர் தரிசன பிராப்தம் வேண்டும் என மனமாற வேண்டி, நிறைவுடன் வெளியே வரும் போது, இஸ்கான் அமைப்பின் புத்தக விற்பனையில், ஆன்மீக புத்தகங்கள், இதிகாச, புராணங்கள், ஸ்தோத்திர புத்தகங்கள், வீடியோக்கள் என அனைத்தும், இந்திய மொழி அனைத்திலும், நியாயமான விலையில் கிடைக்கிறது. தெய்வ திருஉருவ படங்கள், சிலைகள், கீ செயின், அழகான ஆடைகள், பூஜை சாமான்கள் என தேவையான அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கிறது. பசியாற சுவையான வட, தென் இந்திய உணவுகளும் உண்டு. விதவிதமான இனிப்பு, கார பலகாரங்களும், மிக நேர்த்தியாக பேக் செய்யப்பட்டு விற்கப்படுகிறது கிருஷ்ண லீலைகளை விவரிக்கும் 20 நிமிட வீடியோ காட்சியும் காணலாம். கோவிலுக்கு வெளியே








அழகான "கல்யாணி" திருக்குளம் உள்ளது. இதன் அருகே அமர்வதற்கு வசதிகள் உள்ளது. இங்கு தினமும் "அக்ஷ்ய பாத்ரா பவுண்டேஷன்" மூலம் அன்னதானம் நடக்கிறது. இந்த அமைப்பினர் பெங்களூரின் பல இடங்களிலும் அன்னதான சேவையை செய்கிறாரகள்.

இத்திருக்கோவிலில் காலை 4.30 மணிக்கு மங்கள ஆர்த்தி, நரசிம்மர் ஆர்த்தி, கோவிந்தருக்கு சுப்ரபாத சேவா அதன் பின், சிருங்கார ஆர்த்தி, இரவு 7 மணிக்கு ஆர்த்தியும், பின் பகவத் கீர்த்தனை, பஜனையும் தினமும் நடக்கிறது.

இத்திருக்கோவிலில், ஸ்ரீராம நவமி, நரசிம்ம ஜெயந்தி, பலராம ஜெயந்தி, கிருஷ்ண ஜன்மாஷ்டமி, ராதாஷ்டமி, பிரம்மோற்சவம், தஹி உற்சவம், தீப உற்சவம், ஜகன்னாதர் ரதயாத்திரை, ஜூலா உற்சவம், வியாச பூஜை, கோவர்த்தன பூஜை, நித்யானந்த திரயோதசி, குரு பூர்ணிமா, வைகுண்ட ஏகாதசி என அனைத்து பண்டிகைகளும் மிக மிக விமர்சையாக நடக்கிறது. இத்திருக்கோவிலை இரவில் வண்ண விளக்கு ஒளியில் காண்பதும் அழகு. மனதிற்கு அமைதியும், நிறைவும், ஆத்ம திருப்தியும்

ஒரு சேர கிடைக்கும் "ஸ்ரீ ராதா கிருஷ்ணா மந்திர்" தரிசனம் காண அனைவரும் வாருங்கள்!!!

தரிசன நேரம் காலை 4.30 முதல் மதியம் 1.15 வரை மாலை 4.15 முதல் இரவு 8 மணி வரை.

சனி,ஞாயிறு, விடுமுறை நாட்கள் காலை 4.30 முதல் இரவு 8 மணி வரை.

–சுபத்திரா ரங்கநாதன்
ஜதராபாத்.

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 180 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...



eBook
FREEDOWNLOAD

## aanmeegamalar.com



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com



சத்துமாவு
Sathu maavu
41
41 வகையான
சிறுதானியங்களில்
தயாரிக்கப்பட்டது
ingredients
Sathu
maavu kanji
Multigrain Porridge is the most healthy breakfast. It is rich in minerals and has high fibre content that keeps blood sugar under control.
ingredients
Ragi, Samba wheat, Rye, White corn, Black gram, Green gram, Millet, Black cowni rice, Sorghum, Bamboo rice, White chickpeas Black chickpeas, Roasted groundnuts, White soybeans, Horsetail rice, Millet rice, Varaku rice, Samai rice, White Ellur, Black rice, White Awal Sukku, Cucumber seed, Pumpkin seed, Barley, Groom samba, Cashew nut, Almond nut, Walnut, Double beans, Maize, Cardamom, Red Rice, Pistachio Nut, Edible Rice, Biryani Rice, Red Soya Beans, Gatti Elephant Rice, Unity Rice, Darbis Seed Hindu Salt,
மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன்
பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல்
வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.
மேலும்
விபரங்களுக்கு
7550199561

# பணிவோருக்கு பரிவுடன் அருளும்



# பரிக்கல் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

திருமாலின் பத்து அவதாரங்களில் நரசிம்ம அவ தாரமே திடீரென தோன்றிய அவதாரமாகும். "எல்லாப் பொருட் களுக்கு உள்ளேயும் நான் இருக்கிறேன்" என்பதை உணர்த்தவே பகவான் நரசிம்ம அவதாரம் எடுத்தார். அதனால் நரசிம்ம மூர்த்தியை எங்கும் வணங்கலாம். பரந்து விரிந்த நம் பாரத தேசம் முழுவதும் பக்தர்களைப் பெற்று அருள்பாலித்து வருகிறார் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகேயுள்ள பரிக்கல் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர். இந்த சிறப்பு வாய்ந்த திருக்கோவிலின் புராணம் நம்மை நிச்சயம் மெய்சிலிர்க்க வைக்கும்.

இதிகாசக் காலத்தில் பஞ்ச கிருஷ்ணாராண்யம் என வழங்கப்பட்ட இடம் இன்றைய விருத்தாசலம். இந்த திருமுதுகுன்ற பகுதியை ஆண்டு வந்த 'வசந்தராஜன்' என்ற அரசன் நரசிம்ம மூர்த்தியின் மீது அளவு கடந்த பக்தி வைத்திருந்தார். அவனுடைய ஆளுகைக்குள் இருந்த பகுதியில் நரசிம்ம மூர்த்தியை பிரதிஷ்டை செய்ய எண்ணி, அதற்கு தனது குருவின் அறி வுரைப்படி மூன்று இரவுகள் தொடர் வேள்வி நடத்த ஏற்பாடு செய்தார்.



வசந்தராஜன் அழைப்பின் பேரில் குறிப்பிட்ட இடத்திற்கு சிற்றரசர்கள் வந்து கூடினார்கள். வேள்வி தொடங்க இருந்த நேரத்தில் பரிகலாசுரன் என்ற அசுரன்

e-magazine aanmeegamalar.com



அவ்வேள்வியை தகர்க்கும் நோக்கோடு தனது படைகளுடன் வருவதை அறிந்த வசந்தராஜன், தன் குருவை வேண்டி நிற்க, அவர் அரசனின் கையில் கங்கணம் கட்டி ஒரு மந்திரத்தை உப தேசித்து, வேள்வி நடை பெறும் இடத்திலிருந்து சற்று தொலைவில் ஒரு புதருக்குள் 'அசம்பிரக்ஞா' சமாதி நிலையில் தியானம் செய்ய வைத்தார்.

அரசன் தியானம் செய்ய ஆரம்பித்து சில நாழிகைகள் கடந்த சமயத்தில்,பரிகலாசுரன் தன் படையுடன் வந்து வேள்விக்காக வைத்திருந்த மங்கலப் பொருட்களை காலால் இடறி,நாசம் செய்து யாகத்திற்கு வந்தோரை ஓட ஓட விரட்டி னான்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

அரசனைத் தேடி பின், அவர் இருக்கும் இட மறிந்து தியான நிலையிலிருந்தவரை தாக்கத் துவங் கினான். அசம்பிரக்ஞா சமாதி நிலையில் உள்ளபடி எதற்கும் அஞ்சாமல், அசையாமல் இருப்பதைக் கண்டு கோபமுற்று, பல்வேறு வகைகளில் தாக்கி சோர்வுற்று, அரசனின் தலையை கோடாரியால் பிளக்கத் துணிந்து, அவ்வாறு செய்கையில் பிளவுற்ற தலையிலிருந்து நரசிம்ம மூர்த்தி, உக்கிர நரசிம்ம மூர்த்தியாய் கோபக்கனல் பறக்கத் தோன்றி பரிகலாசுரனின் உடலை இரண்டாக பிளந்தெறிந்தார்.

வசந்தராஜன் நரசிம்ம மூர்த்தியின் அகோர விஸ்வரூபத்தை தரிசித்து,எவர் மனதையும் கலங்கச் செய்யும் கோப உக்கிர வடிவத்தைப் போக்கி,அனைவரும் வழிபட்டு அருள்பெறும் சாந்த மூர்த்தியாய் தோன்ற வேண்டும் என வேண்டி நிற்க அதன்படியே சாந்த சொரூபியாய் எழுந்தருளினார். பரிகலாசுரன் எனும் அரக்கனை அழித்த இடம், பரிகலபுரம் என்றாகி, பின்னர் பரிக்கல் என வழங்கலாயிற்று.

எல்லா நரசிம்மர்




e-magazine
aanmeegamalar.com

கோயிலில் உக்கிர மூர்த்தியான நரசிம்மர் தன் மடியிலுள்ள மகாலட்சுமியை ஆலிங்கனம் செய்திருப்பார். ஆனால் இந்தியாவில் இங்கு மட்டும்தான் நரசிம்மரை லட்சுமி தாயார் தன் வலது கையாலும், லட்சுமி தாயாரை நரசிம்மரும் ஆலிங்கனம் செய்தபடி மூர்த்தி உண்டு.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



வீர ஆஞ்சநேயரும், பக்த ஆஞ்சநேயரும் ஒன்றாக சேர்ந்து உள்ளது இத்தலத்தின் முக்கிய சிறப்பாகும். தினம் எள், எண்ணெய் தீபம் ஏற்றி நவதானியங்களை இவர்கள் முன் பரப்பி தங்களது வேண்டுதல்களை கையால் எழுது கிறார்கள். இதன் மூலம் எல்லா நன்மை களும் கிடைப்பதோடு, நவகிரகங்களினால் ஏற்படும் உபாதைகளும் நீங்குவதாக பலன் பெற்றவர்கள் கூறுகின்றனர்.

பல்வேறு துறைகளில் பணிபுரிபவர்களில் பதவி உயர்வு வேண்டுபவர்களும், பதவி இழந்தவர்களும் இங்கு வந்து பிரார்த்தனை செய்தால் அவர்களது வேண்டுதல் கண்டிப்பாக நிறை வேறும் என்பது இத்தலத்தின் தனிச் சிறப்பு என்று இங்கு வந்து பலன டைந்தவர்கள் கூறுகின்றனர்.


செ.சு.சரவணகுமார்

உடல் நலன், மன நலன் பாதிக் கப்பட்டவர்கள், திருமணத் தடை உள்ளவர்கள், வழக்குகளில் சிக்கி இருப்பவர்கள், பில்லி சூன்யங் களால் பாதிக்கப்பட்டவர்கள்இத்தலத்தில் வந்து வழிபட்டால் தங்கள் பிரச்னை களிலிருந்து விடுபட்டு நல்ல தீர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

எதிரிகள் தொல்லைகளிலிருந்து விடுபடு வார்கள். பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், எலுமிச்சை, மஞ்சள், சந்தனம் இவற்றோடு கூடிய நித்ய அபிஷேகங்கள் செய்யலாம். நரசிம்மருக்கு வஸ்திரம் சாத்தலாம்.பக்தர்களின் நேர்த்திகடன்களாக மொட்டை போடுதல், காது குத்துதல், மாவிளக்கு ஏற்றுதல், அங்கபிரதட்சணம் ஆகியவை இத்தலத்தில் செய்யப்படுகின்றன.

வைகுண்ட ஏகாதசி,பிரம்மோற்சவம் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. பிரம்மோற் சவத்தையொட்டி நடைபெறும் வேதபாராயணம், பஜனைகள் சிறப்பு வாய்ந்தவை. பிரதி மாதம் நரசிம்மரின் ஜென்ம நட்சத்திரமான சுவாதி நட்சத்திரத்தன்று அபிஷேக, ஆராதனைகள் செய்யப்பட்டு, பின்னர் மாலை 4:30 மணியளவில் லட்சுமி நரசிம்மரை ஆலய முன் மண்டபத்தில்எழுந்தரு ளச் செய்து, சன்னதி புறப்பாட்டுடன் தொடங்கும் வைபவம் மந்திர புஷ்பம் மற்றும் சோடச உபச்சாரங்கள் நடை பெற்று பூஜைகள் நிறைவுபெறும்.

இந்த நிகழ்வில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் திர ளாக கலந்துகொண்டு, லட்சுமி நரசிம்மரின் அருள் பெறுவார்கள்.

திருக்கோயில் அமைவிடம்:

விழுப்புரம் உளுந்தூர்பேட்டை தேசியநெடுஞ் சாலையிலிருந்து பரிக்கல்லுக்கு பிரிந்து செல்ல வேண்டும். உளுந்தூர்பேட்டையிலிருந் தும், விழுப்புரத்திலிருந்தும் நகரப் பேருந்து வசதி உள்ளன. விழுப்புரத்திலிருந்து 24கி.மீ., உளுந்தூர்பேட்டையிலிருந்து 18 கி.மீ., பயணித் தால் பரிக்கல் வந்தடையலாம்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

தரிசன நேரம்:

காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை.

மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை.

– சென்னிவீரம்பாளையம் செ.சு.சரவணகுமார்

தொடர்புக்கு: 93458 88883

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

eBook FREE DOWNLOAD

**முற்றிலும் இலவசம்**
**எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை**



பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...

## aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com